



# திருப்பூர் மாநகராட்சி

# வரவு செலவுத் திட்டம்

# 2024 - 2025





முத்தமிழறிஞர்

# டாக்டர். கலைஞர் அவர்கள்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**திரு.மு.க.ஸ்டாலின்** அவர்கள்



மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்

**திரு.கே.என்.நேரு அவர்கள்**



மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு
மேம்பாட்டுத் துறை அமைச்சர்

**திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்**



**திரு. ந. தினேஷ்குமார், M.I.B.,**
**மேயர்,**
**திருப்பூர் மாமன்றம்**

## முகவுரை

**படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு.**

**(குறள் எண். 381 –திருவள்ளுவர்)**

குறள் விளக்கம் :- ஆற்றல்மிகு படை, அறிவார்ந்த குடிமக்கள், குறையா வளம், குறையற்ற அமைச்சு, முரிபடாத நட்பு, மோதியழிக்க முடியாத அரண் ஆகிய ஆறு சிறப்புகளும் உடையதே அரசுகளுக்கிடையே ஆண் சிங்கம் போன்ற அரசாகும்.

எனும் குறளுக்கேற்ப தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்தி இந்திய துணை கண்டத்தின் முதல்வர்களின் முதல்வராய் திகழும் “ **திராவிட மாடல்**” ஆட்சிக்கு அகரம் தீட்டி, இந்தியா முழுவதும் விரிவாக்கி, சுயமரியாதைக் கொள்கையில் தந்தை பெரியார், இனமான எழுச்சியில் பேரறிஞர் அண்ணா, இயக்கத்தை வழி நடத்துவதில் முத்தமிழ் அறிஞர் கலைஞர், மொழி உரிமையில் இனமானப் பேராசிரியர் ஆகிய நால்வரின் நிழற்குடையில் நின்று சிந்தனை, கொள்கை, ஆகியவற்றை செயலாக்கி தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்றும், திருப்பூர் மாநகராட்சியை முதன்மை மாநகராட்சியாக்கிட திறமையும், வளமையும் மிக்க திறன்மிகு சீர்மிகு நகரமாக மாற்றிட கருத்துரைகள் வழங்கியும், வழிநடத்தியும், ஆக்கமும், ஊக்கமும் ஏற்படுத்தி, திருப்பூர் மாநகராட்சியின் மேயராக எனக்கு பொறுப்பு வழங்கி ஊக்கப்படுத்தும் **மாண்புமிகு. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்** அவர்களின் நல்லாசியோடு 2024–25 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட அறிக்கையினை திருப்பூர்

மாநகராட்சியின் வளர்ச்சிக் குறிக்கோளுடன் கூடிய நிதிநிலை அறிக்கையை மூன்றாம் முறையாக சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

திருப்பூர் மாநகராட்சியில் தமிழ்நாடு அரசின் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. 2024–25 ஆம் ஆண்டில் புதிதாக புற்று நோய் மருத்துவமனை நவீன உபகரணங்களுடன் அமைக்க பணிகள் நடைபெற்று வருகிறது. திருப்பூர் மாநகராட்சி மற்றும் ரோட்டரி சங்கங்கள் இணைந்து நடத்திய மாராத்தான் ஓட்டப் பந்தயத்தில் 85.00 இலட்சம் ரூபாய் நிதி திரட்டப்பட்டு மருத்துவமனை அமைக்க வழங்கப்பட்டுள்ளது. திருப்பூர் மாநகராட்சியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் வளர்ச்சிப் பணிகளால் சேதமடைந்த சாலைகளை ஆய்வு செய்து புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருப்பூர் மாநகராட்சியில் AMRUT திட்டத்தில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டப்பணி 1120.57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு 100% சதவீதப் பணிகள் முடிவடைந்து **மாண்புமிகு. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்** அவர்களால் திறந்து வைக்கப்பட்டு குடிநீர் மூன்று நாள் முதல் நான்கு நாள் இடைவெளியில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் 15வது மத்திய நிதிக்குழு மானியத்தின் கீழ் 48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குடிநீர் விநியோகம் சீராக SCADA ( Supervisory Control and Data Acquisition) கருவி பொருத்தப்பட்டு அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும் inflow and outflow 100 சதவீதம் மேற்பார்வை செய்யப்பட்டு குடிநீர் சீராக விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழகத்திலேயே முதன் முறையாக திருப்பூர் மாநகராட்சியில் பொது மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் விநியோகிக்கும் நேரத்தை “**குறுஞ்செய்தி**” (SMS)மூலமாக மக்களுக்கு பயனளிக்கும் வகையில் தெரியப்படுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

நமது திருப்பூர் மாநகராட்சியில் AMRUT திட்டத்தில் முதற்கட்ட பாதாள சாக்கடை திட்டப்பணியில் (Phase-I) 636.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 95% சதவீதப் பணிகள் முடிவடைந்துள்ளது. மேலும் புதிதாக (Phase–II) இரண்டாம் கட்ட திட்டப் பணிகள் வார்டு எண். 45(ப), 46, 48(ப), 49, 55(ப), 56(ப), 59(ப) உட்பட்ட பகுதிகளில் 188.61 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. (Phase–III) மூன்றாம் கட்டமாக நல்லூர் மற்றும் வீரபாண்டி பகுதிகளில் உள்ள வார்டுகளுக்கு திட்ட அறிக்கை தயார் செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் நகரத்தில் தொழில் வளர்ச்சிக்கு உதவும் வகையில் நொய்யல் நதிக்கரையின் இருபுறமும் 6.70 கி.மீ. நீளத்திற்கு தார்சாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது. மேலும் இருபுறமும் 5 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருப்பூர் ஈஸ்வரன் கோவில் பாலம், நடராஜ் தியேட்டர் பாலம், தந்தை பெரியார் நகர் பாலம் மற்றும் சங்கிலிப் பள்ளம் ஓடையின் குறுக்கே புதிய பாலங்கள் அமைக்க 36.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது.

திருப்பூர் மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்க திருமுருகன் பூண்டி முதல் கூலிபாளையம் வாவிபாளையம் ரிங் ரோடு வரையிலும் மற்றும் ஜம்மனையில் இருந்து வீரபாண்டி தென்னம்பாளையம் மார்க்கெட் வரையிலும் புதிய சாலை அமைக்கப்படும். மேலும் புதிதாக ஜெய்வாபாய் மேல்நிலைப் பள்ளி சாலையில் இருந்து கல்லூரி சாலையை இணைக்கும் வகையில் ஒரு இரயில்வே மேம்பாலம் அமைக்க கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சி பணிக்காக தேவையான 30 இலகுரக வாகனங்கள், 8 கனரக வாகனங்கள் மற்றும் 3 ஜே.சி.பி. வாகனங்கள் புதிதாக கொள்முதல் செய்யப்பட்டு திடக்கழிவு மேலாண்மை பணிக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகள் துரிதப்படுத்த 5 வார்டுகளுக்கு ஒரு குழு அமைத்து திருப்பூர் மாநகராட்சி பகுதியினை மிளிரும் மாநகரமாக மாற்றிட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் புதிதாக 13,436 LED தெருமின்விளக்குகள் பொருத்தும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 16 உயர்மின் கோபுர விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகரத்தில் சுகாதார வசதிகளை மேம்படுத்த மூன்று புதிய நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் கே.வி.ஆர்.நகர், குளத்துப்பாளையம் மற்றும் நல்லூர் பகுதியில் அமைக்க பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் 11 துணை சுகாதார மையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. புதிதாக கட்டி முடிக்கப்பட்ட 25 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகள், இயன் முறை (Physiotheraphy) மருத்துவ சிகிச்சை மற்றும் யோகா பயிற்சிகள் பெறுவதற்கு வசதியாக நெருப்பெரிச்சல் ஜி.என். கார்டனில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிறப்புப் பிரிவு துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருப்பூர் மாநகராட்சி டி.எஸ்.கே. கந்தசாமி செட்டியார் அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் பழுதடைந்திருந்த அறுவை சிகிச்சை அரங்கத்தினை 22.00 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

சீர்மிகு நகரத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட 28 பணிகளில் 25 பணிகள் முடிவடைந்துள்ளது. மீதமுள்ள அனைத்து பணிகளும் விரைவில் முடிக்கப்படும்.

திருப்பூர் புதிய பேருந்து நிலையம் மற்றும் நஞ்சப்பா ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கட்டி முடிக்கப்பட்டு **மாண்புமிகு. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்** திறந்து வைக்கப்பட்டுள்ளது. திருப்பூர் டவுன்ஹால் மாநாட்டு அரங்கம் மற்றும் பல

அடுக்கு வாகன நிறுத்துமிடம் ஆகியவற்றை **மாண்புமிகு. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்** அவர்களால் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

கோவில்வழியில் நிரந்தர பேருந்து நிலையம் 26.00 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் **மாண்புமிகு. தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களால் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

மேலும் மழைநீர் வடிகால் அமைத்தல், மாநகராட்சி பள்ளிகளில் புதிய வகுப்பறைகள் மற்றும் புதிய கழிப்பிடங்கள் கட்டுதல், பொழுது போக்கு பூங்காக்கள் மற்றும் நீச்சல் குளம், கபடி உள் விளையாட்டு அரங்கம் அமைத்தல், நீர்நிலைகளை தூய்மைப்படுத்துதல், கண்காணிப்பு கேமராக்கள் அமைத்தல், திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல், தெருவிளக்குகள் அமைத்தல், பயணியர் நிழற்குடை, எழில்மிகு அலுவலகம், Traffic Island, QR Code அமைத்தல் போன்ற வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இடுவாய் கிராமத்தில் மாநகராட்சிக்குச் சொந்தமான 12.50 ஏக்கர் பரப்பளவில் அரசு மற்றும் தனியார் கூட்டு ஒப்பந்த முறையில் அறிவியல் பூங்கா அமைக்கப்பட்டு **மாண்புமிகு. தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களால் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

சுற்றுச் சூழல் பாதுகாக்க அடர் மூங்கில் பூங்காக்கள், அடர் காடுகள், மரம் நடுதல், தனியார் பங்களிப்பு மூலம் மியாவாக்கி முறையில் செயல்படுத்தப்பட்டு, பசுமை மாநகரமாக மாற்றப்படும். திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு, நெகிழியில்லா தூய்மையான மாநகரமாக மாற்றப்படும்.

திருப்பூர் திருவிழாவாக பொங்கல் திருவிழாவை நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளுடன் ஆண்டுதோறும் சிறப்பாக கொண்டாடுவது, திருப்பூர் மாநகராட்சி பகுதியில் காலசூழ்நிலைக்கேற்ப ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழ்நாட்டின் பாரம்பரிய கலை கலாச்சாரங்களை பாதுகாக்கவும், பொது மக்களுக்கு இளைப்பாறும் வகையில் கலை

நிகழ்ச்சிகள் பாரம்பரிய உணவுத் திருவிழா மற்றும் விளையாட்டுப் போட்டிகளுடன் கூடிய சிறப்பான பொழுது போக்கு திருநாளாக திறன்மிகு திருப்பூர் மாநகரில் கொண்டாடப்படும்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பள்ளி கல்லூரிகளில் போட்டிகள் நடத்தப்பட்டு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்படும். கடந்தாண்டு மாநகராட்சி பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு கல்வி பயிலும் மாணவர்கள் அரசு பொதுத் தேர்வில் முதல் ஐந்து இடங்களில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறும் மாணவ, மாணவியர்களுக்கு அவர்களை ஊக்குவிக்கும் விதமாக நான்கு தங்க காசுகள் மற்றும் 12 வெள்ளிக் காசுகள் பரிசாக வழங்கப்பட்டது.

எந்நாளும் தமிழும், தமிழர் வாழ்வும் சிறக்க பாடுப்பட்ட **முத்தமிழறிஞர் கலைஞர்** அவர்கள் நூற்றாண்டு நிறைவு நாளை திராவிட மாடல் வெற்றி திருநாளாய் 03–06–2024ஐ கொண்டாடும் வண்ணமாய் திருப்பூர் மாநகரில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, ஓவியப் போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்படும்.

திராவிட மாடல் வெற்றி திருநாளாய் 03–06–2024ஐ கொண்டாடும் வண்ணமாய் திருப்பூர் மாநகரில் பொது மாராத்தான் போட்டி நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

மாநகராட்சிப் பள்ளிகளில் 100 சதவீதம் வருகை பதிவு செய்யும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு சிறப்பு பரிசுகள் மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் 100 சதவீதம் வருகை பதிவு செய்யும் ஆசிரியர்களுக்கும் சிறப்பு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

திருப்பூர் மாநகராட்சி பகுதியில் சிறுகுறு தொழில் முனைவோர்களின் ஆயத்த ஆடை தயாரிப்புகளை விற்பனை செய்ய வசதியாகவும், வாழ்வாதாரம் பெருகவும் மாநகராட்சியின் சார்பில் பனியன் சந்தை உருவாக்கப்படும்.

திருப்பூர் மாநகராட்சி மண்டலப் பகுதிகளில் போக்குவரத்துக்கு இடையூறின்றி வியாபார வாய்ப்புகள் உள்ள தெருவோர பகுதிகளில் உரிமத்துடன் கூடிய தெருவோரக்

கடைகள் அமைக்க அனுமதி வழங்கி மகளிர் சுயஉதவிக்குழு, மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள் ஆகியோர்களின் வாழ்வாதாரம் மேம்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருப்பூர் மாநகராட்சியில் 253 புதிய பணியிடங்கள் அரசாணை எண்.152, ந.நி.ம.கு.வ.துறை நாள் 20–10–2022–ன்படி தோற்றுவிக்கப்பட்டது. இப்பணியிடங்களில் பத்தாண்டுகளுக்கும் மேலாக பதவி உயர்வு பெறாமல் இருந்த 42 பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. மேலும் நேரடி நியமனங்கள் மூலம் 43 பணியிடங்கள் அண்ணா பல்கலைக் கழகத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்படும். மீதமுள்ள அனைத்து காலிபணியிடங்களும் இந்த நிதியாண்டிற்குள் பூர்த்தி செய்யப்பட்டு மாநகராட்சியின் தேவைகள் மற்றும் திட்டங்கள் சிறந்த முறையில் பொது மக்களை சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருப்பூர் மாநகராட்சி மக்களின் நலன் கருதி தயாரிக்கப்பட்டுள்ள 2024–25ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

N. [signature]

**ந.தினேஷ்குமார் M.I.B.,**
**மேயர்**



**பவன்குமார் ஜி கிரியப்பனவர், இ.ஆ.ப.,**
**ஆணையாளர்.**

## முன்னுரை

ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்
போற்றி வழங்கு நெறி

– குறள்

வருவாய் அளவை அறிந்து, அதனை வகுத்து வழங்குவதே பொருளை சீராகக் காத்து வாழும் வழியாகும் என்னும் வள்ளுவரின் வாக்கிற்கேற்ப, மாநகராட்சியின் வருவாய்க்கேற்ப திருப்பூர் மாநகர மக்களின் அடிப்படை மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து அவற்றை பூர்த்தி செய்யும் விதமாக 2024–25ஆம் ஆண்டின் திருப்பூர் மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர்** அவர்களால் திருப்பூர் மாநகராட்சிக்கு அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற மன நிறைவோடு 2024–25ஆம் ஆண்டின் திருப்பூர் மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கையினை முன்மொழிவதில் பேருவகை அடைகிறேன்.

சீர்மிகு நகரம் (SMART CITY) திட்டத்தின் கீழ் ரூ. 965.00 கோடி மதிப்பீட்டில் 28 பணிகள் எடுக்கப்பட்டு அவற்றில் ரூ. 754.38 கோடி மதிப்புடைய 25 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. அவற்றில் நடப்பாண்டில் புதிய பேருந்து நிலையம் மேம்படுத்துதல், நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைத்தல் ஆகிய பணிகள் 05.01.2024 அன்று **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சியில் தினசரி குடிநீர் வழங்க வேண்டும் என்ற நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு, அம்ருத் திட்டத்தில் பவானி ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு புதிய குடிநீர் திட்டம் வடிவமைக்கப்பட்டு, பணிகள் முடிவுற்றது. இப்ணிகளும் மற்றும் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட மாநாட்டு மையம் மற்றும் பல்லடுக்கு வாகன நிறுத்துமிடம் ஆகிய பணிகளும் **மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்** அவர்களால் 11.02.2024 அன்று துவக்கி வைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக முழுமைபெறாமல் இருந்த இத்திட்டப் பணிகள் 2023–24ம் நிதியாண்டில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டும் என்ற முழு முனைப்புடனும் உத்வேகத்துடனும் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வீட்டு குடிநீர் இணைப்பு வழங்குதல், நொய்யல் ஆறு மேம்பாடு செய்தல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் ஆகிய ரூ.210.62 கோடி மதிப்புடைய 3 பணிகள் நடப்பாண்டில் 31.05.2024க்குள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

மக்கள் நெருக்கம் அதிகமுள்ள பகுதிகளில் கழிவுநீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வண்ணம் பாதாள சாக்கடைத் திட்டத்தினை விரிவுபடுத்த உத்தேசித்து, அம்ருத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. தற்போது வரை 13788 பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டு தினசரி 4.50 ML கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. அனைத்து வீட்டு இணைப்புகளும் ஜூன் 2024 இறுதிக்குள் முழுமையாக வழங்கி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாநகரில் ஆண்டுதோறும் அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப பாதாள சாக்கடை திட்டம் விடுபட்ட பகுதிகளுக்கு அம்ருத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ. 188.61 கோடி மதிப்பீட்டில் Underground Sewerage Zone-11, 11.1 & 11.3 பகுதிகளுக்கு பாதாள சாக்கடை வசதி ஏற்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அரசின் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் சிறப்புத் திட்டங்களில் ஒன்றான நமக்கு நாமே திட்டத்தில் இரண்டு ஆண்டுகளாக தமிழ்நாட்டிலேயே அதிக அளவில் பொதுமக்களின் பங்களிப்பைப் பெற்று பணிகள் மேற்கொண்ட முதன்மையான மாநகராட்சியாக திருப்பூர் மாநகராட்சி உள்ளது.

பொதுமக்களின் தேவைக்கு ஏற்ப பொதுமக்களின் பங்களிப்புடன்அரசின் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் நவீன வகுப்பறைகள் அமைத்தல், பள்ளிகளுக்குத் தேவையான கணிணிகள் வழங்குதல், காவல் துறையுடன் இணைந்து சாலைப் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக பொதுமக்களின் பங்களிப்புடன் நவீன புற்றுநோய் சிகிச்சை மையம் (Cancer Center) அமைக்கப்பட்டு வருகிறது. மேலும் வரும் நிதியாண்டில் நொய்யலாற்றின் கரையோரம் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் Public Space Corridor for Landscaping பணி மேற்கொள்ளப்பட திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

திருப்பூர் மாநகராட்சியில் பொதுமக்களின் முக்கிய தேவையான புதிய குடிநீர்த் திட்டம் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டம் ஆகிய பணிகளால் சேதமடைந்த சாலைகள் புதுப்பித்தல் மற்றும் மண் சாலைகளை தார் சாலைகளாக மாற்றுதல் ஆகியவை தமிழ்நாடு நகர்ப்புர சாலை உட்கட்டமைப்பு திட்டம், நகர்ப்புர சாலை மேம்பாட்டு திட்டம், மாநில நிதிக்குழு மானியம், சிறப்பு மானியம், பயன்பாட்டில் இல்லாத கணக்கு மற்றும் வட்டி நிதி மற்றும் 15வது மத்திய நிதி குழு மானியம் மூலம் கூடுதலாக அரசின் நிதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சேதமடைந்த 624.54 கி.மீ நீளமுள்ள 3667 எண்ணிக்கையிலான சாலைகளில் 468.53 கி.மீ நீளமுள்ள 2508 எண்ணிக்கையிலான சாலைகள் நடப்பாண்டில் சீரமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள சாலைகள் வரும் நிதியாண்டில் சீரமைக்கப்படும். மேலும் ரூ 63.52 கோடி மதிப்பீட்டில் 748 சாலைகள் 111.72 கி.மீ நீளத்திற்கு சீரமைக்கப்பட உள்ளது.

பொதுமக்களின் சுகாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு மாநகரின் பல்வேறு இடங்களில் 36 எண்ணிக்கை நகர்ப்புர நல்வாழ்வு மையங்கள் அமைக்கப்பட்டு பொதுமக்கள்

பயன்பாட்டில் உள்ளது. மக்களுக்குத் தேவையான பொது சுகாதார பணிகள், அரசின் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், டாக்டர் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் ஆகிய திட்டங்கள் நடப்பு நிதியாண்டில் சிறந்த முறையில் நடைபெற்றது. எதிர்வரும் நிதியாண்டிலும் பொது சுகாதார பணிகள் மேலும் சிறந்த முறையில் நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியில் சுற்றிதிரியும் தெருநாய்களை பாதுகாப்பான முறையில் பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கெண்டு, Rabies தடுப்பூசி செலுத்தி பிடித்த இடத்திலேயே திரும்ப விடும் பணிகள் நடைபெற்று வருகிறது. வரும் நிதியாண்டில் இப்பணிகள் மேலும் சிறந்த முறையில் செயல்படுத்தப்படும்.

தன்னார்வலர்களுடன் இணைந்து மாநகரில் ஐந்துக்கும் மேற்பட்ட இடங்களில் அதிக எண்ணிக்கையிலான மரக்கன்றுகள் நடப்பட்டு பசுமை பகுதிகள் (Green cover) உருவாக்கப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் நொய்யலாற்றின் கரைகளின் இருபுறமும் மரக்கன்றுகள் நட்டு பசுமை பகுதிகள் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் தன்னார்வலர்களுடன் இணைந்து மாநகரின் பல்வேறு பகுதிகளில் உள்ள 36 எண்ணிக்கையிலான பூங்காக்கள் பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் மூலம் மாநகரின் பசுமை பகுதிகள் அதிகரிக்கப்படும்.

திருப்பூர் மாநகராட்சியில் 253 புதிய பணியிடங்கள் அரசாணை எண் 152 ந.நி.ம.கு.வ.துறை நாள் 20.10.2022ன்படி தோற்றுவிக்கப்பட்து. இப்பணியிடங்களில் பத்தாண்டுகளுக்கும் மேலாக பதவி உயர்வு பெறாமல் இருந்த 42 பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. மேலும் நேரடி நியமனங்கள் மூலம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பணியிடங்களை அண்ணா பல்கலைக்கழகம் மூலம் தேர்வு செய்து நியமனம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்மாநகராட்சியில் காலியாக உள்ள 15 துப்புரவு ஆய்வாளர்கள் பணியிடங்களும், 4 படவரைவாளர் பணியிடங்களும், 10 தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களும், 8 நகரமைப்பு உதவி பொறியாளர் பணியிடங்களும், 19 உதவி பொறியாளர் பணியிடங்களும் வரும்

நிதியாண்டில் நிரப்பப்படும். இதன் மூலம் திருப்பூர் மாநகராட்சியில் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களின் எண்ணிக்கையை தேவையான அளவு அதிகரித்து பொதுமக்களுக்கு மாநகராட்சியின் சேவைகள் மற்றும் திட்டங்கள் சிறந்த முறையில் சென்றடைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

25 ஆண்டுகள் அப்பழுக்கற்ற வகையில் பணிபுரிந்த அனைத்து மாநகராட்சி பணியாளர்களுக்கும் ரூ.2000 காசோலையாகவும் மற்றும் பாராட்டு பத்திரமும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக கடந்த குடியரசு தினத்தன்று 10 பணியாளர்களுக்கு ரூ.2000 காசோலை மற்றும் பாராட்டு பத்திரம் வழங்கப்பட்டது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின் சிறப்புத் திட்டமான மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூலம் திருப்பூர் மாநகராட்சியின் சேவைகளை நேரடியாக மக்களிடம் கொண்டு சென்று சேர்க்கும் வகையில் 1235 எண்ணிக்கையில் சொத்து வரி விதிப்பு, சொத்து வரி பெயர் மாற்றம், புதிய குடிநீர் இணைப்பு, பிறப்பு மற்றும் இறப்புச் சான்று கோரும் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு தகுதியான 1217 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு தக்க உத்திரவுகள் வழங்கப்பட்டது.

ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தில் தொலைபேசி மற்றும் சமூக வலைதளங்களின் வழியாக பெறப்பட்ட குடிநீர், தெருவிளக்கு, திடக்கழிவு மேலாண்மை தொடர்பான 15,428 புகார்கள் பெறப்பட்ட 48 மணி நேரத்திற்குள் சரிசெய்யப்பட்டுள்ளது.

அன்னியச் செலாவணியை ஈட்டித்தரும் தொழில் நகரமான திருப்பூர் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்து வருகிறது. வேகமாக வளர்ந்து வரும் இம்மாநகரின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு, மக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ள 2024–25ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையினை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

**பவன்குமார் ஜி கிரியப்பனவர், இ.ஆ.ப.,**
**ஆணையாளர்.**

# வரவு செலவுத் திட்டம் 2024–2025


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதி ஆகியவற்றின் சுருக்கம் | 1 |
| 2 | வருவாய் மேம்பாடு | 2 |
| 3 | சீர்மிகு நகரம் (SMART CITY ) திட்டம் | 3 |
| 4 | நொய்யல் ஆறு மேம்பாடு செய்தல், இருபுறமும் நடைபாதையுடன் கூடிய சாலைகள் அமைத்தல், பூங்காக்கள் அமைத்தல். | 3 |
| 5 | பேருந்து நிலையங்களை மேம்பாடு செய்தல் | 4 |
| 6 | தினசரி சந்தை, பூ அங்காடி, மீன் அங்காடி மற்றும் வாரச்சந்தை மேம்பாட்டு பணிகள் | 4 |
| 7 | பல அடுக்கு வாகன நிறுத்துமிடங்கள் | 6 |
| 8 | மாநாட்டு அரங்கம் கட்டுதல் (Convention Center) | 6 |
| 9 | சாலைகளை மேம்பாடு செய்தல் | 7 |
| 10 | ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் | 7 |
| 11 | பிரதான மழைநீர் வடிகால்கள் அமைத்தல் | 8 |
| 12 | தெருவிளக்குகள் | 8 |
| 13 | சூரிய ஒளி மின்சக்தி | 8 |
| 14 | நூலகம் மற்றும் அறிவுசார்மையம் | 9 |
| 15 | குறியாக்கங்கள் (Signages) | 9 |
| 16 | அம்ருத் திட்டம் 2017–20 | 10 |
| 17 | புதிய குடிநீர் திட்டம் | 10 |
| 18 | பாதாள சாக்கடை திட்டம். | 11 |
| 19 | அம்ருத் 2.0 – பாதாள சாக்கடை திட்டம் | 12 |
| 20 | இதர அரசுத் திட்டங்கள் | |
| 21 | மூலதன மானிய நிதி –2023–24 | 12 |
| 22 | சாலைகள் மேம்பாடு | 12 |
| 23 | நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்டம் | 13 |
| 24 | தமிழ்நாடு நகர்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் | 13 |
| 25 | மாநில நிதிக் குழுத் திட்டம் | 13 |
| 26 | சிறப்பு மானியத் திட்டம் | 14 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 27 | பயன்பாட்டில் இல்லாத கணக்கு மற்றும் வட்டி நிதி திட்டம் | 14 |
| 28 | 15வது மத்திய நிதி குழு மானியம் | 14 |
| 29 | மழைநீர் வடிகால்கள் மேம்பாடு | 15 |
| 30 | புதிய பேருந்து நிலையம் மற்றும் பாலங்கள் கட்டுதல் | 15 |
| 31 | நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுதல் | 15 |
| 32 | 15வது மத்திய நிதி குழு மானியம் 2022–23 மற்றும் 2023–24 குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் | 16 |
| 33 | நமக்கு நாமே திட்டம் | 16 |
| 34 | தெரு விளக்குகள் | 17 |
| 35 | சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பாரளுமன்ற உறுப்பினர் நிதி | 17 |
| 36 | எரிவாயு தகன மேடைகள் | 17 |
| 37 | கல்வி மேம்பாட்டு பணிகள் | 18 |
| 38 | பொது சுகாதாரம் | 19 |
| 39 | தூய்மை இந்தியா திட்டம் | 19 |
| 40 | திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் | 20 |
| 41 | மாநகராட்சி பணியாளர்களுக்கு சீருடை மற்றும் காலணி வழங்குதல் | 22 |
| 42 | தூய்மை பணியாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல் | 22 |
| 43 | தூய்மை பணியாளர்களுக்குத் தேவையான தளவாட சாமான்கள் | 23 |
| 44 | பொதுசுகாதார பணிக்கு கிருமிநாசினிகள் வாங்குதல் | 23 |
| 45 | பிறப்பு இறப்பு பதிவு பணிகள் | 23 |
| 46 | டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்தல் | 24 |
| 47 | தெருநாய்களை கட்டுப்படுத்துதல் | 25 |
| 48 | பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு பணிகள் | 27 |
| 49 | அறுவசை சிகிச்சை அரங்கம் புனரமைப்பு பணி | 28 |
| 50 | வருமுன் காப்போம் திட்டம் | 28 |
| 51 | மருந்துக் கிடங்கு | 29 |
| 52 | தூய்மைப் பணியாளர் கணக்கெடுப்பு திட்டம் | 29 |
| 53 | தேசிய சபாய் கரம்சாரிஸ் நிதி மற்றும் மேம்பாடு கழகம் மூலம் தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோராக மற்றும் திட்டம் | 30 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 54 | பொது நிதி – வரவினம் மற்றும் செலவினச் சுருக்கம் | 31 |
| 55 | பொது நிதி – வருவாய் வரவினம் | 32 |
| 56 | பொது நிதி – மூலதன வரவினம் | 35 |
| 57 | பொது நிதி – வருவாய் செலவினம் | 36 |
| 58 | பொது நிதி – மூலதன செலவினம் | 40 |
| 59 | குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி<br>வரவினம் மற்றும் செலவினச் சுருக்கம் | 41 |
| 60 | குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி – வருவாய் வரவினம் | 42 |
| 61 | குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி – வருவாய் செலவினம் | 44 |
| 62 | குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி – மூலதன வரவினம் | 46 |
| 63 | குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி – மூலதன செலவினம் | 47 |
| 64 | ஆரம்பக் கல்வி நிதி – வரவினம் மற்றும் செலவினச் சுருக்கம் | 48 |
| 65 | ஆரம்பக் கல்வி நிதி – வரவினம் மற்றும் செலவினம் | 49 |
| 66 | வருவாய் நிதி – ஒரு ரூபாயில் வரவு | 51 |
| 67 | வருவாய் நிதி – ஒரு ரூபாயில் செலவு | 52 |
| 68 | மூலதன நிதி – வரவுகள் | 53 |
| 69 | மூலதன நிதி – செலவுகள் | 54 |

## வருவாய் மற்றும் மூலதன நிதி, குடிநீர் விநியோகம் மற்றும் வடிகால் நிதி மற்றும் ஆரம்பக் கல்வி நிதி ஆகியவற்றின் சுருக்கம்

| விபரம் | வருவாய் நிதி | குடிநீர் வடிகால் நிதி | கல்வி நிதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ரூ. இலட்சத்தில் | | | |
| வருவாய் வரவினம் | 35,097.21 | 14,699.24 | 1,010.61 | 50,807.06 |
| மூலதன வரவினம் | 64,597.87 | 40,799.50 | 1,436.00 | 1,06,833.37 |
| **மொத்தம்** | **99,695.08** | **55,498.74** | **2,446.61** | **1,57,640.43** |
| வருவாய் செலவினம் | 32,716.99 | 14,615.84 | 733.15 | 48,065.98 |
| மூலதன செலவினம் | 66,147.00 | 41,704.09 | 1,636.00 | 1,09,487.09 |
| **மொத்தம்** | **98,863.99** | **56,319.93** | **2,369.15** | **1,57,553.07** |
| உபரி / பற்றாக்குறை | **831.09** | **(821.19)** | **77.46** | **87.36** |

வருவாய் மற்றும் மூலதனநிதியில் ரூ.831.09 இலட்சம் உபரியாகவும், குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் ரூ.821.19 இலட்சம் பற்றாக்குறையாகவும் மற்றும் ஆரம்பக் கல்வி நிதியில் ரூ.77.46 இலட்சம் உபரி இருப்பாகவும், மொத்தமாக ரூ.87.36 இலட்சம் உபரி இருப்பாகவும் 2024–25ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.






## வருவாய் மேம்பாடு

திருப்பூர் மாநகராட்சி வருவாயினை பெருக்குவதற்கு பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2023–2024ம் நிதியாண்டில் 4098 எண்ணிக்கை சொத்துவரி விதிப்பு ஏற்படுத்தப்பட்டு வருடாந்திர கேட்பு ரூ.12.62 கோடி உயர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் விடுபட்ட சொத்துவரி இனங்கள், வரி விதிக்கப்படாத கட்டிடங்கள், உபயோக மாற்றம் செய்யப்பட்டுள்ள கட்டிடங்கள் ஆகியவற்றைக்கண்டறிந்து வரும் நிதியாண்டில் விடுதலின்றி சொத்துவரி விதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாநகராட்சியின் வருவாய் கணிசமாக உயர்ந்தப்படும். மேலும் விடுபட்ட அனைத்து தொழில்வரி இனங்களும் கண்டறிந்து வரி விதிப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் புதிய பூ மார்கெட், பல அடுக்கு இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் மீன் மார்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஆகிய ஆண்டு குத்தகை இனங்கள் மூலம் 5.94 கோடி கூடுதலாக வருவாய் ஈட்டப்பட்டது.

சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த மாநாட்டு மையம் பல அடுக்கு வாகன நிறுத்துமிடம், புதிய பேருந்து நிலையம் மற்றும் கட்டிடப்பணி முடிவுறும் தருவாயில் உள்ள காய்கறி மார்கெட் முதலிய அனைத்து வருவாய் இனங்களும் பொது ஏலம் வழியாக ஒப்படைக்கப்பட்டு மாநகராட்சியின் வருவாய் மேம்படுத்தப்படும். அரையாண்டு ஆரம்பித்து 30 தினங்களுக்குள் சொத்துவரி செலுத்துபவர்களுக்கு 5% ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. சிறப்பு முகாம்கள் நடத்தி வரிதாரர்களை அணுகி உரிய காலத்தில் வரி செலுத்தி 5% ஊக்கத்தொகை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இந்நிதியாண்டில் தொடர்ந்து இப்பணி தீவிரப்படுத்தப்படும்.

## சீர்மிகு நகரம் (SMART CITY ) திட்டம்

இந்தியாவில் 100 நகரங்களை மேம்படுத்துவதற்கான மத்திய அரசு நிதி மற்றும் மாநில அரசு நிதியுடன் சீர்மிகு நகரம் (Smart City) திட்டத்தினை 2015–16ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. திருப்பூர் மாநகரம் மூன்றாவது சுற்றில் சீர்மிகு நகரம் திட்டத்தை செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ளது. சீர்மிகு நகரம் திட்டத்தின் நோக்கமே மாநகரில் வளர்ச்சியை மேம்படுத்துவதாகும். இத்திட்டத்தின்கீழ் பகுதி வளர்ச்சி மேம்பாடு (Area Based Development) மற்றும் நகர் பகுதி முழுவதும் மேம்பாடு (Pan City Development) என இவ்விரண்டு திட்டங்களுக்கான மொத்த மதிப்பீடு ரூ.965.00 கோடியாகும். பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 28 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பெரும்பாலான பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

**நொய்யல் ஆறு மேம்பாடு செய்தல், இருபுறமும் நடைபாதையுடன் கூடிய சாலைகள் அமைத்தல், பூங்காக்கள் அமைத்தல்.**





மாநகரின் மையப்பகுதியில் நொய்யல் ஆறு, சங்கிலிப்பள்ளம் மற்றும் ஜம்மனை ஓடைகள் செல்கின்றன. இயற்கை வளம் மிக்க நொய்யலாற்றில் 6.70 கி.மீ நீளத்திற்கு தூய்மைப்படுத்தி இருகரையோரங்களிலும் தடுப்புச்சுவர்கள், கழிவுநீர் கால்வாய், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், நடைபாதை மற்றும் சாலைகள் அமைத்தும், கண்ணைக்கவரும் மின் விளக்குகள் அமைத்தும்,

பூங்காக்கள் அமைத்தும் அழகுற மேம்பாடு செய்ய சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் ரூ.172.97 கோடிக்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பாண்டில் இப்பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

## பேருந்து நிலையங்களை மேம்பாடு செய்தல்



மாநகராட்சியால் மூன்று பேருந்து நிலையங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. காமராஜர் சாலையில் உள்ள பழைய பேருந்து நிலையம் 1960ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்தது. 1991ஆம் ஆண்டு மேம்பாடு செய்யப்பட்டது. பெருமாநல்லூர் சாலையில் 2000ஆம் ஆண்டு முதல் புதிய பேருந்து நிலையம் செயல்பட்டு வருகிறது.



இந்த இரண்டு பேருந்து நிலையங்களையும் மேம்படுத்த தற்போது சீர்மிகு நகரம் திட்டத்தின்கீழ் ரூ.69.99 கோடிக்கு அனுமதி பெறப்பட்டு, அவற்றில் ரூ. 38.81 கோடி மதிப்பீட்டில் (பழைய பேருந்து நிலையம்) முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையம் மற்றும் ரூ. 31.18 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

## தினசரி சந்தை, பூ அங்காடி, மீன் அங்காடி மற்றும் வாரச்சந்தை மேம்பாட்டு பணிகள்

காமராஜர் சாலையில் 1963ஆம் ஆண்டு கட்டப்பட்ட பழமையான கட்டிடத்தில் தினசரி அங்காடி இயங்கி வந்தது. சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் ரூ.31.80 கோடி மதிப்பீட்டில் கடைகள்,

குளிர்சாதன வசதி, வாகனம்நிறுத்துமிட வசதி, கழிப்பறை வசதி, குடிநீர் வசதி ஆகியவற்றுடன் அழகிய தோற்றத்துடன் புதிய கட்டிடம் கட்டும்பணிகள் நடைபெற்று வருகிறது. நடப்பாண்டில் இப்பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

ஈஸ்வரன் கோவில் வீதியில் 1960ஆம் ஆண்டு கட்டப்பட்ட ஓட்டுக்கட்டிடத்தில் போதிய காற்றோட்ட வசதியின்றி நெருக்கடி மிகுந்த சாலையில் பூ அங்காடி இயங்கி வந்தது. சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் ரூ.4.80 கோடி மதிப்பீட்டில் அங்காடி கடைகள் குளிர்சாதன வசதி, தரைத்தளத்தில் வாகனம் நிறுத்தும் வசதி, கழிப்பறை வசதி, குடிநீர் வசதி ஆகியவற்றுடன் பொலிவான தோற்றத்துடன் புதிய பூ அங்காடி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.



மாநகரின் பல்வேறு பகுதிகளில் மீன் கடைகள் சாலையோரங்களில் போதிய சுகாதார வசதியின்றி இயங்கி வந்தது. மாநகரின் சுகாதார வசதியை மேம்படுத்தும் பொருட்டும், பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட கடல்சார் உணவு கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டும் சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் ரூ.2.33 கோடி மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய மீன் அங்காடி கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.



தென்னம்பாளையம் பகுதியில் புராதனமாக செயல்பட்டு வந்த வாரச்சந்தை ஒட்டு மொத்த காய்கறி விற்பனை செய்யும் தினசரி சந்தையாக இயங்கி வந்தது. சந்தையின் பெரும்பாலான பகுதி திறந்தவெளியாகவும், சிமெண்ட் கூரையும் கொண்டிருந்தது. மழைக்காலங்களில் வியாபாரிகள் மற்றும் பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளானார்கள். இதனை தவிர்க்கும் பொருட்டு சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் ரூ.12.85 கோடி

மதிப்பீட்டில் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய சந்தை அமைக்கும் பணி முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

## பல அடுக்கு வாகன நிறுத்துமிடங்கள்



மாநகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள வணிக வளாகங்களுக்கும், அரசுத்துறை அலுவலகங்களுக்கும், வங்கிகளுக்கும் செல்லும் பொது மக்கள் தங்களது நான்கு சக்கர வாகனங்களை அகலம் குறைந்த சாலைகளின் ஓரத்தில் நிறுத்திவிட்டு சென்றுவிடுவதால் மாநகரில் காலை முதல் இரவு வரை கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். இதனை தவிர்க்கும் பொருட்டு ரூ.19.54 கோடி மதிப்பீட்டில் காமராஜர் சாலையில் பழைய பேருந்து நிலையம் அருகிலும், ரூ.12.87 கோடி மதிப்பீட்டில் குமரன் சாலையில் நகர் மண்டபம் பகுதியிலும் பலஅடுக்கு வாகன நிறுத்துமிடங்கள் கட்டும் பணி முடிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

## மாநாட்டு அரங்கம் கட்டுதல் (Convention Center)



திருப்பூர் மாநகரம் உள்ளாடை உற்பத்தியில் உலகப்புகழ் வாய்ந்த நகரமாகும். உள்ளாடை உற்பத்தி மூலம் சுமார் ரூ.25,000 கோடி அன்னியச்செலாவணியாக ஈட்டப்பட்டு வருகிறது. மாநகரில் அடிக்கடி உள்ளாடை உற்பத்தி சம்மந்தமான கருத்தரங்குகள், கண்காட்சிகள்

நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் பொருட்காட்சிகள், உள்ளூர் கலை மற்றும் கலாச்சார பண்பாட்டு அமைப்புகளால் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மாநகரில் இதற்கென தனியாக இடவசதி இல்லாத காரணத்தால் ஆங்காங்கே உள்ள தனியாருக்கு சொந்தமான காலியிடங்கள் மற்றும் திருமண மண்டபங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் நகரின் மையப்பகுதியான நகர் மண்டபம் (TOWN HALL) பகுதியில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மாநாட்டு அரங்கம் ரூ.53.48 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளது.

## சாலைகளை மேம்பாடு செய்தல்




மாநகரில் அகலம் அதிகமாக உள்ள சாலைகளை தேர்ந்தெடுத்து அதில் சீர்மிகு சாலைக்குத் தேவையான பாதாள சாக்கடை, கம்பி வடங்களுக்கு தனியாக Duct அமைப்புகள், நடைபாதை, சாலை குறியீடுகள், வேகத் தடுப்பான்கள் மற்றும் தெருவிளக்கு முதலிய அனைத்து வசதிகளுடன் ரூ.147.95 கோடி மதிப்பீட்டில் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் பணிகள் முடிவுற்று சாலைகள் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

## ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம் (Integrated Command and Control Center)




சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் ரூ.10.88 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சி மைய அலுவலக வளாகத்தில் ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையக்கட்டிடம் கட்டுதல் மற்றும் அதற்கான

உபகரணங்கள் அமைக்கவும், கணிணி மென்பொருள் மற்றும் வன்பொருள் வாங்கவும் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, பணிகள் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

## பிரதான மழைநீர் வடிகால்கள் அமைத்தல்

மாநகரில் மைய பகுதிக்குள் மழை காலங்களில் மழைநீர் தேக்கம் ஏற்பட்டு குடியிருப்பு பகுதிகளில் சேதம் ஏற்படுத்தும் பகுதிகள் கண்டறியப்பட்டு அதில் ரூ.41.52 கோடி மதிப்பீட்டில் பிரதானமழைநீர் வடிகால்கள் மூலம் மழைநீர் நொய்யலாற்றில் கலக்குமாறு வடிவமைக்கப்பட்டு பணிகள் முடிவுற்றுள்ளது.

## தெருவிளக்குகள்

சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் ரூ.15.60 கோடி மதிப்பீட்டில் 6604 எண்ணிக்கை குழல்



விளக்குகளை எல்.இ.டி. தெரு விளக்குகளாக மாற்றியும், 3263 எண்ணிக்கை புதிய எல்.இ.டி. தெருவிளக்குகள் பொருத்தும் பணி முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

## சூரிய ஒளி மின்சக்தி



சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் சூரிய ஒளி கொள்கையினை செயல்படுத்த திருப்பூர் மாநகராட்சிக்கு சொந்தமான 81 கட்டிடங்களில் ரூ. 2.44 கோடி மதிப்பீட்டில் சூரிய ஒளி மின் சக்தி அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 450 மெகாவாட் மின்சாரம் தயார் செய்யப்படுகிறது. மேலும் இடுவாய் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சூரிய ஒளி மூலம் 4.8 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கும் ஆலையும், அதே பகுதியில் சூரிய

ஒளி மூலம் 2.0 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கும் ஆலையும் முறையே ரூ. 28.00 கோடி மற்றும் ரூ. 12.00 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 7236 மெகாவாட் மின்சாரம் தயார் செய்யப்படுகிறது. இதனால் ஆண்டொன்றுக்கு ரூ.6.00 கோடி மதிப்புடைய மின் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது.

### நூலகம் மற்றும் அறிவுசார்மையம்

நஞ்சப்பா ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ரூ. 2.61 கோடி மதிப்பீட்டில் நூலகம் மற்றும் அறிவுசார் மையக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இங்கு போட்டித் தேர்வுக்குத் தயாராகும் மாணவ மாணவியருக்கு பிரத்யேக இலவசப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.




### குறியாக்கங்கள் (Signages)




மாநகரின் வீதிகளின் பெயர்களைக் குறிக்கும் பெயர்ப் பலகைகள், வரைபடங்கள் ஆகியவைகள் ரூ. 6.40 கோடி மதிப்பீட்டில் மாநகர வீதிகளில் பொருத்தப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

## அம்ருத் திட்டம் 2017–2020

### புதிய குடிநீர் திட்டம்



விரிவடைந்த மாநகராட்சியின் 2020, 2035 மற்றும் 2050 ஆம் ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் மக்கள் தொகை முறையே 10,80,000, 14,80,000 மற்றும் 19,50,000 ஆகும் என மதிப்பிடப்பட்டது. மாநகரின் எதிர்கால குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டு புதிய குடிநீர் திட்டம் அவசியமாகிறது. 2017–2020ஆம் ஆண்டு அம்ருத் திட்டத்தின் கீழ் ரூ.1120.57 கோடி மதிப்பீட்டில் பவானி ஆற்று நீரை ஆதாரமாக கொண்டு புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்த அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் புதிய நீராதாரம் உருவாக்குதல் நீராதாரத்திலிருந்து தலைமை சுத்திகரிப்பு நிலையம் வரை 19.47 கி.மீ நீளத்திற்கு பிரதான குழாய்கள் அமைத்தல், 196.00 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து மாநகர் முழுமைப்பகுதிக்கும் 148.00 கி.மீ நீளத்திற்கு நீருந்து குழாய்கள் அமைத்தல், 29 இடங்களில் புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் கட்டுதல், 1148.37 கி.மீ நீளத்திற்கு குடிநீர் விநியோகக் குழாய்கள் பதித்தல் ஆகியவற்றில் பெரும்பான்மையான பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. குடிநீர் விநியோக மண்டலம் 30 மற்றும் 50–ன் பகுதிகளில் 24x7 முறையில் குடிநீர் விநியோகம் செய்வது போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றது. இப்பணிகள் இவ்வாண்டில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.



## பாதாள சாக்கடை திட்டம்.




திருப்பூர் மாநகராட்சி, நகராட்சியாக இருந்தபோது புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தினரால் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டது. 2009ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் செயல்பாட்டில் உள்ளது.விரிவாக்கம் செய்யப்பட்ட மாநகராட்சி பகுதிகளில் 19 வார்டு பகுதிகளில் மட்டுமே பாதாள சாக்கடை திட்டம் 135.60 கி.மீ நீளத்திற்கு உள்ளது. மாநகராட்சியின் விரிவாக்கத்தை கருத்தில் கொண்டு பாதாள சாக்கடை திட்டம் விரிவுபடுத்த திட்டமிடப்பட்டது. மாநகராட்சியில் புவியியல் அமைப்புக்கு ஏற்ப 17 கழிவு நீர் மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.



மாநகரின் மையப்பகுதியில் உள்ள 4 கழிவு நீர் மண்டலங்களில் பாதாள சாக்கடைத் திட்டம் உள்ளது. தற்போது 2017–20ஆம் ஆண்டின் அம்ருத் திட்டத்தின் கீழ் மக்கள் நெருக்கம் மிகுந்த 10 மண்டலங்களில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த ரூ.636.40 கோடிக்கு அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில் 544.218 கி.மீ நீளத்திற்கு கழிவு நீர் சேகரிக்கும் குழாய்கள் அமைத்தல், 9 கழிவு நீரேற்று நிலையங்கள் அமைத்தல், 71 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டுதல், 74,293 வீட்டு இணைப்புகள் வழங்குதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றது. இப்பணிகள் இவ்வாண்டில் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

### அம்ருத் 2.0 – பாதாள சாக்கடை திட்டம்

மாநகரில் பாதாள சாக்கடை அமைப்பு விடுபட்டுள்ள இடங்களில் பாதாள சாக்கடை மண்டலம் 11, 11.1 மற்றும் 11.3 பகுதிகளில் ரூ. 188.61 கோடி மதிப்பீட்டில் அமைக்க 18.03.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இப்பணிகள் தொடங்கப்படும்.

## இதர அரசுத் திட்டங்கள்

### மூலதன மானிய நிதி –2023–24

மூலதன மானியம் நிதி 2023–24ன் கீழ் அம்ருத் 2017–20ல் குடிநீர் திட்டத்தில் கட்டிமுடிக்கப்பட்ட நீர் எடுக்கும் கிணறு பம்பு ஹவுஸ், பிரதான குடிநீர் பகிர்மானக் குழாயில் 5 இடங்கள் (5 Tapping point) மற்றும் 70 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் உள்ள நீரேற்றுக்குழாய்களில் (Inlet) SCADA system மூலம் நீரின் அளவை கண்காணித்தல் பணிக்கு ரூ. 11.33 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணி ஆணை வழங்கும் நிலையில் உள்ளது. நடப்பாண்டில் இப்பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

### சாலைகள் மேம்பாடு



திருப்பூர் மாநகராட்சியில் புதிய குடிநீர்த் திட்டம் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டம் ஆகியவை நடைபெற்று வருகின்றன. இப்பணிகளால் சேதமடைந்த சாலைகளை பல்வேறு திட்டங்களின் மூலம் சீரமைக்கப்பட்டு வருகிறது.

## நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்டம்




நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்டம் (NSMT 2022-23 & 23-24)ன் கீழ் மூன்று பகுதிகளாக தொகுத்து ரூ.49.53 கோடி மதிப்பீட்டில் 124.30 கி.மீ நீளத்திற்கு 711 சாலை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 87.61 கி.மீ நீளத்திற்கு 469 சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 36.69 கி.மீ நீளத்திற்கு 242 சாலை பணிகள் நடைபெற்று வருகிறது.

## தமிழ்நாடு நகர்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம்

தமிழ்நாடு நகர்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் [TURIP 2023-24]ன் கீழ் இரண்டு பகுதிகளாக தொகுத்து ரூ.62.06 கோடி மதிப்பீட்டில் 135.80 கி.மீ நீளத்திற்கு 766 சாலைபணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 67.07 கி.மீ நீளத்திற்கு 374 சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 68.73 கி.மீ நீளத்திற்கு 392 சாலைபணிகள் நடைபெற்று வருகிறது.

## மாநில நிதிக் குழுத் திட்டம்



மாநில நிதிக் குழு [SFC 2022-23 & 2023-24]ன் கீழ் மூன்று பகுதிகளாக தொகுத்து ரூ.48.19 கோடி மதிப்பீட்டில் 76.72 கி.மீ நீளத்திற்கு 546 சாலை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 48.19 கி.மீ நீளத்திற்கு 363 சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 28.53 நீளத்திற்கு 163 சாலை பணிகள் நடைபெற்று வருகிறது.

## சிறப்பு மானியத் திட்டம்

சிறப்பு மானியம் [Special Grant 2023-24]ன் கீழ் ரூ.14.57 கோடி மதிப்பீட்டில் 30.47 கி.மீ நீளத்திற்கு 200 சாலை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 20.92 கி.மீ நீளத்திற்கு 142 சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 10.47 நீளத்திற்கு 58 சாலை பணிகள் நடைபெற்று வருகிறது.

## பயன்பாட்டில் இல்லாத கணக்கு மற்றும் வட்டி நிதி திட்டம்

பயன்பாட்டில் இல்லாத கணக்கு மற்றும் வட்டி நிதி [DA & IF 2023-24]ன் கீழ் ரூ.54.09 கோடி மதிப்பீட்டில் 78.68 கி.மீ நீளத்திற்கு 587 சாலை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 57.39 கி.மீ நீளத்திற்கு 336 சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 21.29 நீளத்திற்கு 251 சாலை பணிகள் நடைபெற்று வருகிறது.

## 15வது மத்திய நிதி குழு மானியம்



15வது மத்திய நிதி குழு மானியம் [15th CFC 2023-24]ன் கீழ் ரூ.15.08 கோடி மதிப்பீட்டில் 34.95 கி.மீ நீளத்திற்கு 263 சாலை பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 22.61 கி.மீ நீளத்திற்கு 180 சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 12.34 நீளத்திற்கு 83 சாலை பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்டம் [NSMT 2024-25]ன் கீழ் ரூ.9.41 கோடி மதிப்பீட்டில் 20.87 கி.மீ நீளத்திற்கும், தமிழ்நாடு நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்டம் [TURIP 2024-25]ன் கீழ் ரூ.17.10 கோடி மதிப்பீட்டில் 34.64 கி.மீ நீளத்திற்கும் மற்றும் மாநில நிதிக்குழு [SFC 2024-25] திட்டத்தின் கீழ் ரூ.37.02 கோடி மதிப்பீட்டில் 55.25 கி.மீ நீளத்திற்கும் சாலைப் பணிகள் வரும் நிதியாண்டில் மேற்காள்ளப்படும்.

## மழைநீர் வடிகால்கள் மேம்பாடு




மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்கியிருந்த பகுதிகளில் மூலதன மானியம் நிதி [CGF 2023-24] மற்றும் 15வது மத்திய நிதி குழு மானியத்தின் கீழ் 12.07 கி.மீ நீளத்திற்கு ரூ.38.72 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

## புதிய பேருந்து நிலையம் மற்றும் பாலங்கள் கட்டுதல்

மாநகரின் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு தென் மாவட்டங்களுக்கு செல்லும் பேருந்துகளை தாராபுரம் சாலையில் கோவில்வழி பகுதியில் உட்கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி [I&A 2022-23 & 2023-24] திட்டத்தின் கீழ் ரூ.26.00 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது

மேலும் மாநகரின் போக்குவரத்தினை மேம்படுத்தும் பொருட்டு ரூ.36.36 கோடி மதிப்பீட்டில் நொய்யலாற்றின் குறுக்கே நடராஜ் தியேட்டர் அருகில் மற்றும் ஈஸ்வரன் கோவில் பாலம், சங்கிலிப்பள்ளம் ஓடையின் குறுக்கே சொர்ணபுரி லே–அவுட் பகுதியிலும் மற்றும் ஜம்மனை ஓடையின் குறுக்கே தந்தை பெரியார் நகர் பகுதியிலும் 4 பாலங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது.

## நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டுதல்

நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குட்பட்ட 11 நகர்புற துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு ரூ.3.30 கோடி மதிப்பீட்டிலும், நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கூடுதல் கட்டிடங்கள் அமைப்பதற்கு 3 சுகாதார நிலையங்களுக்கு ரூ.1.80 கோடி மதிப்பீட்டிலும், நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 3 புதிய கட்டிடங்கள்

அமைப்பதற்கு ரூ.3.60 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் புதிய நகர்புற சுகாதார மற்றும் ஆரோக்கிய மையம் அமைப்பதற்கு அவினாசிகவுண்டம்பாளையம் பகுதியில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டிலும் பணிகள் நடைபெற்று வருகிறது

### 15வது மத்திய நிதி குழு மானியம் 2022–23 மற்றும் 2023–24 குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள்

15வது மத்திய நிதி குழு மானியம் [15th CFC 2021-22 & 2022-23]ன் கீழ் ரூ.48.00 கோடி மதிப்பீட்டில் விடுபட்ட பகுதிகளுக்கு குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

### நமக்கு நாமே திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டங்களில் ஒன்றான நமக்கு நாமே திட்டத்தில் இரண்டு ஆண்டுகளாக தமிழ்நாட்டிலேயே அதிக அளவில் பொதுமக்களின் பங்களிப்பைப் பெற்று பணிகள் மேற்கொண்ட முதன்மையான மாநகராட்சியாக திருப்பூர் மாநகராட்சி உள்ளது.



2023–24ம் நிதியாண்டில் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.8.92 கோடி மதிப்பீட்டில் சாலை, மழைநீர் வடிகால், பள்ளி வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் பராமரிப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகள் நடைபெற்று வருகிறது. வரும் நிதியாண்டில் பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். 2024–25ம் நிதியாண்டிலும் இத்திட்டம் மேலும் விரிவாக்கப்பட்டு பொதுமக்களுக்கு பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்படும்.

## தெரு விளக்குகள்

திருப்பூர் மாநகராட்சியில் புதியதாக 8681 LED மின்விளக்குகள் பொருத்த ரூ. 12.16 கோடி மதிப்பீட்டில் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் 1165 எண்ணிக்கைகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. 4755 சோடிய ஆவி விளக்குகளை மின்சிக்கன LED விளக்குகளாக மாற்ற ரூ. 5.35 கோடி மதிப்பீட்டில் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் 2265 எண்ணிக்கைகள் முடிவுற்று மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. வரும் ஜூன் 2024க்குள் இப்பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

## சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பாரளுமன்ற உறுப்பினர் நிதி

2023–24ம் நிதியாண்டில் பொதுமக்களுக்குத் தேவையான பல்வேறு பணிகள் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் செயல்படுத்தப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 43 பணிகள் ரூ.4.92 கோடி மதிப்பீட்டில் எடுத்துகொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. 2024–25ம் நிதியாண்டிலும் இந்நிதியில் பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செயல்படுத்தப்படும்.

## எரிவாயு தகன மேடைகள்

மூலதன மானிய நிதியின் கீழ் திருப்பூர் மாநகராட்சியின் தெற்கு பகுதியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் முருகம்பாளையத்தில் எரிவாயு தகன மேடை கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் நிலையில் உள்ளது. மாநகராட்சியின் வடக்குப் பகுதியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் வாவிப்பாளையத்தில் எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி முடிவுறும் தறுவாயில் உள்ளது.

## கல்வி மேம்பாட்டு பணிகள்

பள்ளி மேம்பாட்டு நிதி – இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் [School Improvement Grant - O&M Works) 2022-23 மற்றும் 2023-24ன் கீழ் 27 பள்ளிகளுக்கு 66 புதிய வகுப்பறைகள் கட்டும் பணிகள் ரூ.11.25 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் 25 பள்ளிகளுக்கு ரூ.2.11 கோடி மதிப்பீட்டில் பராமரிப்பு செய்யும் பணிகளும் நடைபெற்று வருகிறது.

மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்தும் பொருட்டு மாநகரில் உள்ள பல்வேறு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட Corporate Social Responsibility (CSR) நிதியில் 33 மாநகராட்சிப் பள்ளிகளில் தலா ஒரு ஸ்மார்ட் பேனல் திரைகள் (Smart Panel Board) ரூ. 24.75 இலட்சம் மதிப்பீட்டில் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் வரும் நிதியாண்டில் இரண்டு மாநகராட்சிப் பள்ளிகளை நவீன பள்ளிகளாக (Digital Class Rooms) மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருப்பூர் மாநகராட்சியில் முதன்முறையாக கடந்த 25.08.2023 முதல் 120 மாநகராட்சி துவக்கப்பள்ளிகளில் தினசரி சுமார் 20,000 மாணவ மாணவியருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மதிய உணவுத் திட்டத்தின் மூலம் 136 மாநகராட்சிப் பள்ளிகளில் தினசரி 44,114 மாணவ மாணவியருக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது.

திருப்பூர் மாநகராட்சி பள்ளி வளாகங்கள் மற்றும் கழிப்பறைகளை சுகாதாரமாக பராமரிக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட பள்ளி மேலாண்மை குழு (School Management Committee) மூலம் தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் 223 பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு திருப்பூர் மாநகராட்சி கல்வி வரி (Education Cess) மற்றும் பொது நிதியிலிருந்து 2024–25ஆம் ஆண்டிற்கு ரூ. 98.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வரும் நிதியாண்டு முதல் மாநகராட்சிப் பள்ளிகளில் 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ மாணவியரை ஊக்குவிக்கும் வகையில் ரூ. 50,000 ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

# பொது சுகாதாரம்

## தூய்மை இந்தியா திட்டம் (SBM)



திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2021–2026 வரையுள்ள ஆண்டுகளில் (ஐந்து ஆண்டு காலம்) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவு மேலாண்மை பணி, துப்புரவுப் பணி மேற்கொள்ள, வீடுவீடாகவும் மற்றும் பொதுமக்கள் மத்தியிலும் விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள தூய்மை இந்தியா திட்டம் – (U) 2.0ன் கீழ் 2022–2023 முதல் 2025–2026 ஆகிய நான்கு ஆண்டு காலத்திற்கு ரூ.293.96 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இம்மாநகராட்சியில் மண்டலம் எண் 1 முதல் 4 வரையுள்ள பகுதிகளில் மேற்படி பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு தனியார் நிறுவனத்தின் மூலம் வெளிக்கொணர்வு முகமை மூலம் 30 எண்ணிக்கையில் பரப்புரையாளர்கள், 4 எண்ணிக்கையில் மேற்பார்வையாளர்கள் மற்றும் 1 ஒருங்கிணைப்பாளரை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிகளை மேற்கொள்ள 2023-2024ம் ஆண்டிற்கு ரூ.73.49 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, மேலும் 2024-25ஆம் ஆண்டிற்கு ரூ.75.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு இடங்களில் ரூ 99.84 இலட்சம் மதிப்பீட்டில் 4 சமுதாய கழிப்பிடங்களும் மற்றும் ரூ 145.12 இலட்சம் மதிப்பீட்டில் 4 பொது கழிப்பிடங்களும் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. வரும் நிதியாண்டில்

ரூ 170.08 இலட்சம் மதிப்பீட்டில் 4 பொது கழிப்பிடங்களும் மற்றும் 1 சமுதாய கழிப்பிடமும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## திடக்கழிவு மேலாண்மைத் திட்டம்

திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி சேகரம் செய்யப்படும் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை மேலாண்மை செய்ய தேவையான பணியாளர்கள் மற்றும் வாகனங்களை வெளிச்சந்தை முறையில் Key Performacnce Indicator (KPI)ன் அடிப்படையில் பணியமர்த்த ஒப்பந்ததாரர்கள் மற்றும் நிறுவனங்களை தேர்வு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.35883/2022/EA1-SWM-9 நாள்.17.02.2023ல் அனுமதி பெறப்பட்டு, ஒரு மெட்ரிக் டன் ரூ.3,851/ வீதம் தினசரி 573.55 MT திடக்கழிவுகளை மேலாண்மை செய்ய ஆண்டொன்றிக்கு ரூ.9625.19 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டு இம்மாநகராட்சி மண்டலம் எண் 1 முதல் 4 வரையுள்ள பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள ஸ்ரீனிவாசா வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீஸ் (SWMS) என்ற தனியார் நிறுவனத்திற்கு உத்திரவு வழங்கப்பட்டு 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் 1 மற்றும் 4 மண்டலம் மற்றும் 2023ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4 மண்டலங்களிலும் திடக்கழிவுகளை மேலாண்மை செய்ய பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணிகளை மேற்கொள்ள இம்மாநகராட்சிக்கு சொந்தமான வாகனங்களை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கீழ்கண்டுள்ள விபரப்படி தினசரி வாடகை அடிப்படையில் மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| Category | Total Vehicles | Hand over to SWMS | Rent Fixed per day Rs. | Collectable Rent Per Day Rs. |
|---|---|---|---|---|
| **LCV** | 112 | 112 | 200 | 22400 |
| **HCV** | 11 | 11 | 400 | 4400 |
| **Compactor** | 11 | 11 | 1000 | 11000 |
| **Total** | **134** | **134** | | **37800** |

மேற்படி நிறுவனத்தின் மூலம் இம்மாநகராட்சி பகுதிகளில் தினசரி அனைத்து வீடுகள் தோறும் உருவாகும் திடக்கழிவுகளை சேகரித்து தரம் பிரித்து நுண் உரமாக்கும் மையத்திற்கு (MCC) வழங்கவும் மீதமுள்ள திடக்கழிவுகளை பாறைக்குழியில் கொட்டி மேலாண்மை செய்யப்பட்டு வருகிறது.



மேலும் மாநகராட்சி 15ம் நிதிக் குழுவின் வரையறுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்படி பணிக்கு தேவையான 30 இலகு மற்றும் 8 கனரக வாகனங்கள் புதிதாக வாங்கப்பட்டு மேற்படி திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள KPI ன் அடிப்படையில் தனியார் நிறுவனத்திடம் தினசரி வாடகை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் திடக்கழிவு மேலாண்மை பணி, பொதுசுகாதாரம் மற்றும் அவசர பணிகளுக்கு மண்டலம் எண் 1 முதல் 4 வரையுள்ள பகுதிகளில் மாநகராட்சி வசம் உள்ள இலகுரக வாகனங்கள் **(LCV)**, கழிவுநீர் அகற்றும் வாகனங்கள், JCB மற்றும் Bobcat போன்ற வாகனங்களை இயக்க தேவையான எரிபொருள் மற்றும் பராமரிப்பு செலவுகள் மேற்கொள்ள 2024- 25ஆம் ஆண்டிற்கு ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.







## மாநகராட்சி பணியாளர்களுக்கு சீருடை மற்றும் காலணி வழங்குதல்



திருப்பூர் மாநகராட்சியில் பணிபுரியும் மாநகராட்சி நிரந்தர பணியாளர்களான தூய்மை பணியாளர்கள் மற்றும் ஓட்டுநர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சீருடைகள் மற்றும் காலணிகள் புதிதாக வாங்கி வழங்க 2023-24 ஆம் ஆண்டிற்கு ரூ.21.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் ஆண்கள் 420 நபர்கள் பெண்கள் 191 நபர்கள் ஆக மொத்தம் 611 தூய்மை பணியார்களுக்கு இரண்டு ஜோடி சீருடைகள் மற்றும் ஒரு ஜோடி காலணி மற்றும் மாநகராட்சி நிரந்தர ஓட்டுநர்களுக்கு இரண்டு ஜோடி சீருடைகள் புதிதாக வாங்கி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2024-25ஆம் ஆண்டுக்கு ரூ.25.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## தூய்மை பணியாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல்

திருப்பூர் மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களின் உடல் நலத்தினை கருத்தில் கொண்டு பாதுகாப்பான முறையில் பணிபுரியும் பொருட்டு துப்புரவு பணிக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்களான ஒளிரும் மேல்சட்டை, கையுறை, தலைக்கவசம், மாசுகட்டுப்பாட்டு முககவசம் போன்றவைகளை புதிதாக வாங்க 2023-24ஆம் ஆண்டிற்கு

ரூ.18.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிடப்பட்டுள்ளது. மேலும் 2024-25ஆம் ஆண்டுக்கு ரூ. 20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தூய்மை பணியாளர்களுக்குத் தேவையான தளவாட சாமான்கள்

திருப்பூர் மாநகராட்சியில் துப்புரவு பணிக்கு பயன்படுத்தப்படும் தளவாட சாமான்களான சவுல், மண்வெட்டி, சாக்கடை மண் அள்ளும் கரண்டி, ரோடு கூட்டும் பிரஷ், குப்பைத்தொட்டிகள் மற்றும் இதர தளவாடங்களை இதற்கு முன் ரூ.65.00 இலட்சத்திற்கு வாங்கபட்டுள்ளது. மேலும் 2024-25ஆம் ஆண்டிற்கு ரூ. 69.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பொதுசுகாதார பணிக்கு கிருமிநாசினிகள் வாங்குதல்

திருப்பூர் மாநகராட்சியில் துப்புரவு பணி மற்றும் இதர பொதுசுகாதார பணிகளை மேற்கொள்ள தேவைப்படும் கிருமிநாசினிகளான பிளீச்சிங்பவுடர், நீர்த்த சுண்ணாம்புதூள், லைசால், லெமன்கிராஸ் ஆயில் மற்றும் இதர கிருமிநாசினிகளை வாங்க 2023–24ஆம் ஆண்டிற்கு ரூ.62.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2024–25ஆம் ஆண்டிற்கு ரூ. 69.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### பிறப்பு இறப்பு பதிவு பணிகள்

திருப்பூர் மாநகராட்சி பகுதியில் நிகழும் பிறப்பு இறப்புகளை விடுபடாமல் 100% பதிவு செய்யும் பொருட்டு மேற்படி பணியின் அவசியம் கருதி 60 வார்டு பகுதிகளும் நிகழும் பிறப்பு இறப்புகளை 60 வார்டு பிரிவுகள் மூலம் பதிவு செய்ய தேவைப்படும் பதிவேடுகள், படிவங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்க 2023–24 ஆம் ஆண்டிற்கு ரூ.7.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2024–25ஆம் ஆண்டிற்கு ரூ. 8.00 இலட்சம்

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பிறப்பு இறப்பு அலுவலங்களில் விண்ணப்பிக்கும் பொதுமக்களின் அவசர அவசியம் கருதி விரைவாக பணிகளை மேற்கொள்ள, 60 வார்டுகளுக்கு 20 அலகுகளாக மொத்தம் 20 வெளிச்சந்தை பணியாளர்களை கொண்டு, தரவுகளை உள்ளீடு விரைந்து பணிகள் தொய்வின்றி செயல்பட உள்ளீட்டாளர்களை ரூ.40.00 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்தல்



திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சல், மலேரியா, சிக்கன்குனியா மற்றும் இதர கொசுவினால் பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் பொருட்டு 2023-24ஆம் ஆண்டில் கொசு புழு உற்பத்தி தடுப்பு பணிக்கு தற்காலிக பணியாளர்கள் (DBC) ஒவ்வொரு மண்டலத்திற்கும் தினசரி 75 நபர்கள் வீதம் மொத்தம் 300 பணியாளர்களை கொண்டு ஆண்டு முழுவதும் கொசுபுழு உற்பத்தி தடுப்பு பணி மற்றும் அபேட் மருந்து தெளிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



மேலும் இம்மாநகராட்சி மண்டலம் எண் 1 முதல் 4 வரையுள்ள பகுதிகளில் தினசரி காலை மற்றும் மாலை ஆகிய இரண்டு வேலைகளிலும் அனைத்து வீடுகள் மற்றும் பொது இடங்களில் கொசுபுகை மருந்து அடித்து கொசு உற்பத்தியை கட்டுப்படுத்தும் பொருட்டு அதற்கான புதிய புகைபோக்கி இயந்திரங்களான எளிதில் தூக்கிச் செல்லக்கூடிய கொசு புகை மருந்து தெளிக்கும் இயந்திரம் ஒரு வார்டுக்கு தலா (Portable Fogging Machine) 1



வீதம் மொத்தம் 60 எண்ணிக்கையிலும் மற்றும் வாகனத்தில் பொருத்தப்பட கூடிய கொசு புகை மருந்து தெளிக்கும் இயந்திரம் (Vehicle Mounted Fogging machine) ஒரு மண்டலத்திற்கு 1 வீதம் மொத்தம் 4 எண்ணிக்கையில் ரூ.80.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு புதிதாக வாங்கப்பட்டு மேற்படி பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.



இம்மாநகராட்சியில் கொசு தொல்லையை கட்டுப்படுத்த தேவையான கொசுமருந்துகள், கொசுவலைகள் மற்றும் கொசுத்தடுப்பு பணியாளர்களைஈடுபடுத்தி கொசு புழு உற்பத்தி தடுப்பு பணிகள் மேற்கொள்ளும் செலவினத்திற்கு 2024–25ஆம் ஆண்டிற்கு ரூ.430.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தெருநாய்களை கட்டுப்படுத்துதல் (Animal Birth Control)**



திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட தெருக்களில் சுற்றிதிரியும் தெரு நாய்களின் இனப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் பொருட்டு 2021 ல் தெருநாய்கள் கணக்கெடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் இம்மாநகராட்சியில் சுற்றிதிரியும் 6369 தெருநாய்களை பாதுகாப்பான முறையில் பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, Rabies தடுப்பூசி செலுத்தப்பட்டு பிடித்த இடத்திலேயே திரும்ப விடும் பணிக்கு கடந்த ஆண்டில் ரூ.44.58 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்திய விலங்குகள் நல வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட தங்கம் மெம்மோரியல் டிரஸ்ட், திருப்பூர் என்ற தன்னார்வ தொண்டு

நிறுவனம் மூலம் உத்திரவு வழங்கப்பட்டு ஜனவரி 2022 முதல் தற்போது (பிப்ரவரி) வரை 2435 தெருநாய்களை பாதுகாப்பான முறையில் பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, Rabies தடுப்பூசி செலுத்தப்பட்டு பிடித்த இடத்திலேயே திரும்ப விடப்பட்டுள்ளது.



மேலும் மேற்படி பணிகளை மேற்கொள்ள ஏதுவாக 2023ல் புதிதாக ஒரு தெருநாய் பிடிக்கும் கூண்டு வாகனம் (LCV) வாங்கப்பட்டு இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெரு நாய்களை பிடிக்கும் பணியினை மேற்கொள்ளும் தங்கம் மெமோரியல் டிரஸ்ட் தன்னார்வ தொண்டு நிறுவனம் வசம் ஒப்படைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேற்படி பணிகள் மேற்கொள்ள 2024-25ம் ஆண்டிற்கு சுமார் ரூ.65.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று, தெருநாய்களை கட்டுப்படுத்தும் வகையில் மண்டலம் 1 மற்றும் 2 பகுதிகளில் தனியாக தெருநாய் கருத்தடை மற்றும் பராமரிப்பு நிலையம் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



## பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு பணிகள்



தமிழ்நாடு அரசின் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் கீழ் திருப்பூர் மாநகராட்சி பகுதியில் இயங்கி வரும் 17 அரசு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில், கே.வி.ஆர் நகர் மற்றும் நல்லூார் அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்ட தமிழ்நாடு அரசால் தலா ரூ.120.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு திருப்பூர் மாநகராட்சியால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், PRMH, வீரபாண்டி, நெரிப்பெரிச்சல், TSK, அண்ணா நெசவாளர் காலனி ஆகிய அரசு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தலா ரூ.60.00 இலட்சம் நிதியில் கூடுதல் கட்டிடம் தமிழ்நாடு அரசின் நிதி பெற்று நமது மாநகராட்சியால் கட்டப்பட்டு வருகிறது.

திருப்பூர் மாநகராட்சி நான்கு மண்டல பகுதிகளில் அமைந்துள்ள 17 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மாநகராட்சி மருந்தகத்திற்கு குள்ளம்பாளையம் பகுதிகளில் உள்ள TNMSC மருந்து கிடங்கில் இருந்து மருந்துகள் மற்றும் மருத்துவம் சார்ந்த பொருட்களை பெற்று மேற்படி மையங்களுக்கு விநியோகம் செய்யும் பணிகளை மேற்கொள்ள தற்காலிகமாக இரண்டு டெம்போ டிராவலர் (Tempo Traveller) வாகனம் மாத வாடகை அடிப்படையில் (வாகனம், எரிபொருள் மற்றும் ஒட்டுநர் உட்பட) தனியார் நிறுவனத்தின் மூலம் கடந்த ஆகஸ்ட் 2023 ஆம் மாதம் முதல் மேற்படி மருத்துவ பணிக்கு பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 2024-25ஆம் ஆண்டுக்கு ரூ.18.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## அறுவசை சிகிச்சை அரங்கம் புனரமைப்பு பணி

திருப்பூர் மாநகராட்சியில் இயங்கி வரும் TSK கந்தசாமி செட்டியார் அரசு நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் பழுதடைந்திருந்த அறுவை சிகிச்சை அரங்கை ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியின் மூலம் புனரமைத்து, பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் காரணமாக நமது மாநகராட்சி சார்ந்த பெண்கள் மற்றும் ஆண்கள் குடும்பக் கட்டுபாட்டு அறுவை சிகிச்சை சேவையினை நமது பகுதியிலேயே பெற்று பயனடைவார்கள்.

## வருமுன் காப்போம் திட்டம்



திருப்பூர் மாநகராட்சியில் டாக்டர் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட இலவச மருத்துவ முகாம் 2023–2024ம்ஆண்டில் மண்டலங்களுக்கு ஒரு முகாம் வீதம் 4 முகாம்கள் நடைபெற்றது. நடப்பாண்டில் நான்கு மண்டலங்களிலும் இத்திட்டம் மூலம் 3994 பொதுமக்கள் சிகிச்சை பெற்று பயன்அடைந்துள்ளனர்.




மேலும் மேற்படி வருமுன் காம்போம் திட்ட பணிகளை இம்மாநகராட்சி பகுதியில் தொடர்ந்து செயல்படுத்த அரசின் வழிகாட்டுதலின்படி நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்த ஆண்டு தூய்மை பணியாளர்களுக்காக 5 சிறப்பு வருமுன் காப்போம் திட்டம், இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, நமது திருப்பூர் மாநகராட்சியில் பணிபுரியும் நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்களின் சுகாதாரம் மேம்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மருந்துக் கிடங்கு



திருப்பூர் மாநகராட்சி TSK மருத்துவ சுகாதார நிலைய வளாகத்தில் மாநகராட்சி பகுதிகளில் செயல்பட்டு வரும் 17 நகர்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தேவையான மருந்து பொருட்களை சேமித்து, பின்னர் பிரித்து அனைத்து சுகாதார நிலையங்களுக்கும் வழங்க ரூ.27.00 இலட்சம் செலவில் புதியதாக மருந்துக்கிடங்கு கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.



## தூய்மைப் பணியாளர் கணக்கெடுப்பு திட்டம்

தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நலத்திட்டத்தை பயன்படுத்தும் வகையில் திருப்பூர் மாநகராட்சி பகுதியில் வசிக்கும் அரசு மற்றும் தனியார் தூய்மை பணியாளர்களுக்கு செவ்வனே சென்று சேர்வதை உறுதி செய்யும் வகையில் கணக்கெடுப்பு பணி தற்போது நடைபெற்று வருகிறது. இதன் மூலம் இதுவரை 1377 தூய்மைப் பணியாளர்களை கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ளது.





## தேசிய சபாய் கரம்சாரிஸ் நிதி மற்றும் மேம்பாடு கழகம் மூலம் தூய்மைப் பணியாளர்களை தொழில் முனைவோராக மற்றும் திட்டம் (NSKFDC-SUY SCHEME)

திருப்பூர் மாநகராட்சியில் தூய்மை பணியாளர்களை தொழில் முனைவோராக ஆக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. நமது மாநகராட்சி தூய்மை பணியாளர்களை சிறு சிறு குழுக்களாக அமைத்து மானியத்துடன் கூடிய கடன் உதவி பெற்று வாகனம் வாங்கி இம்மாநகராட்சியில் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக ரூ.260 இலட்ச மதிப்பீட்டில் 5 வாகனம் வாங்க அனுமதி பெறப்பட்டுள்ளது. இதன் பயனாக மாநகராட்சியில் பணிபுரியும் 25ற்கு மேற்பட்ட தூய்மை பணியாளர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும். மேலும், முதல் கட்டமாக தற்போது ரூ.45 இலட்ச மதிப்பில் ஒரு கழிவுநீர் அகற்றும் வாகனம் வரப்பெற்று பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.





# பொது நிதி
## வரவினம் மற்றும் செலவினச் சுருக்கம்

| கணக்குத் தலைப்பு | குறியீடு | உள்ளபடி வரவு 2022-2023 | திட்ட மதிப்பீடு 2023-24 | திருத்திய மதிப்பீடு 2023-24 | திட்ட மதிப்பீடு 2024-25 |
|---|---|---|---|---|---|
| **வருவாய் வரவினம்** | | | | ரூபாய் இலட்சத்தில் | |
| வருவாய் வரியினங்கள் | 110 | 8,409.01 | 8,343.83 | 8,522.40 | 9,615.22 |
| ஒப்படைக்கப்பட்ட வருவாய் | 120 | 805.25 | 945.00 | 527.13 | 1,286.65 |
| மாநகராட்சி சொத்துக்களின் மூலம் கிடைக்கும் வருமானம் | 130 | 2,394.91 | 2,758.22 | 2,786.11 | 3,261.03 |
| சேவை கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் | 140 | 6,855.98 | 5,448.00 | 4,705.19 | 6,047.00 |
| உற்பத்தி பொருள் விற்பனை | 150 | 133.64 | 412.00 | 127.83 | 453.00 |
| வருவாய் மானியம் மற்றும் சகாயத் தொகை | 160 | 9,733.72 | 10,725.00 | 11,668.54 | 12,525.21 |
| முதலீடுகள் மீதான வருவாய் | 170 | 111.72 | 85.45 | 122.10 | 134.10 |
| வங்கி கணக்கு மீதான வட்டி மூலம் வருவாய் | 171 | 671.19 | 85.00 | 171.19 | 150.00 |
| பிற வருவாய் | 180 | 218.71 | 210.00 | 101.68 | 100.00 |
| முந்தைய ஆண்டு வரவினம் | 280 | 227.83 | 4.00 | 305.02 | 1,525.00 |
| **மொத்தம்** | | **29,561.96** | **29,016.50** | **29,037.19** | **35,097.21** |
| **மூலதன வரவினம்** | | | | | |
| மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | 320 | 37,360.67 | 59,720.00 | 33,255.25 | 64,597.87 |
| **மொத்தம்** | | **37,360.67** | **59,720.00** | **33,255.25** | **64,597.87** |
| **மொத்த வரவினம்** | | **66,922.63** | **88,736.50** | **62,292.44** | **99,695.08** |
| | | | | | |
| **வருவாய் செலவினம்** | | | | | |
| பணியமைப்புச்செலவுகள் | 210 | 9,786.07 | 9,231.90 | 10,947.55 | 10,701.00 |
| நிர்வாகச் செலவுகள் | 220 | 2,557.12 | 833.65 | 991.45 | 1,299.75 |
| இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 230 | 6,034.33 | 12,736.20 | 7,218.33 | 15,798.72 |
| நிதிச் செலவுகள் | 240 | 181.19 | 158.69 | 35.11 | 85.52 |
| திட்டச் செலவுகள் | 250 | 404.65 | 151.00 | 33.95 | 155.00 |
| மானியம் மற்றும் சகாயத் தொகை | 260 | 1,316.71 | 4,601.00 | 1,456.00 | 4,517.00 |
| முந்தைய ஆண்டு செலவினம் | | 2,604.16 | 4.00 | 187.15 | 160.00 |
| **மொத்தம்** | | **22,884.23** | **27,716.44** | **20,869.54** | **32,716.99** |
| **மூலதன செலவினம்** | | | | | |
| நிலையான சொத்துக்கள் | 330 | 29,908.77 | 59,720.00 | 39,881.88 | 66,147.00 |
| கடன்கள் திரும்ப செலுத்துதல் | 410 | 998.61 | 820.83 | 250.07 | - |
| **மொத்தம்** | | **30,907.38** | **60,540.83** | **40,131.95** | **66,147.00** |
| **மொத்த செலவினம்** | | **53,791.61** | **88,257.27** | **61,001.49** | **98,863.99** |
| **உபரி / பற்றாக்குறை** | | **13,131.02** | **479.23** | **1,290.95** | **831.09** |

# பொது நிதி
## வருவாய் வரவினம்

| கணக்கு எண் | கணக்குத் தலைப்பு | உள்ளபடி வரவு 2022-2023 | திட்ட மதிப்பீடு 2023-24 | திருத்திய மதிப்பீடு 2023-24 | திட்ட மதிப்பீடு 2024-25 |
|---|---|---|---|---|---|
| **வருவாய் வரியினங்கள்** | | | | | |
| 91-110-01-01 | சொத்துவரி – குடியிருப்பு | 29,26,04,919 | 31,67,00,000 | 31,47,85,560 | 36,20,03,000 |
| 91-110-01-03 | சொத்துவரி – நிறுவனங்கள் | 13,48,04,179 | 16,11,34,000 | 16,39,42,480 | 18,85,33,000 |
| 91-110-01-02 | சொத்துவரி – வணிகம் | 11,43,33,845 | 13,33,79,000 | 14,18,38,368 | 16,31,14,000 |
| 91-110-01-04 | சொத்து வரி – காலியிடம் | 1,40,24,206 | 2,37,21,000 | 2,30,98,555 | 2,65,63,000 |
| 94-110-10-01 | தொழில் வரி | 3,96,37,363 | 4,02,06,000 | 3,73,81,090 | 4,29,88,000 |
| 91-431-10-06 | சொத்துவரி – குடியிருப்பு – நிலுவை – வசூலிக்கத்தக்கது | 9,67,05,935 | 6,49,20,000 | 4,35,21,355 | 4,50,49,000 |
| 91-431-10-08 | சொத்துவரி – நிறுவனங்கள் – நிலுவை – வசூலிக்கத்தக்கது | 4,05,06,403 | 2,69,40,000 | 3,65,20,773 | 3,59,48,000 |
| 91-431-10-07 | சொத்துவரி – வணிகம் – நிலுவை – வசூலிக்கத்தக்கது | 3,60,16,151 | 2,35,20,000 | 3,17,77,461 | 3,35,44,000 |
| 91-431-10-09 | சொத்து வரி – காலியிடம் – நிலுவை – வசூலிக்கத்தக்கது | 4,24,86,748 | 2,56,83,000 | 3,73,18,456 | 3,84,16,000 |
| 94-431-19-04 | தொழில் வரி – நிலுவை – வசூலிக்கத்தக்கது | 2,97,80,935 | 1,81,80,000 | 2,20,55,985 | 2,53,64,000 |
| | **மொத்தம் (1)** | **84,09,00,684** | **83,43,83,000** | **85,22,40,083** | **96,15,22,000** |
| **ஒப்படைக்கப்பட்ட வருவாய்** | | | | | |
| 98-120-10-01 | சொத்து மாற்றங்களுக்குரிய வரி | 5,92,09,364 | 6,85,00,000 | 3,85,29,100 | 10,00,00,000 |
| 98-120-10-02 | கேளிக்கை வரி | 2,13,15,160 | 2,60,00,000 | 1,41,84,089 | 2,86,65,000 |
| | **மொத்தம் (2)** | **8,05,24,524** | **9,45,00,000** | **5,27,13,189** | **12,86,65,000** |
| **மாநகராட்சி சொத்துக்களின் மூலம் கிடைக்கும் வருவாய்** | | | | | |
| 06-130-20-01 | கட்டிட வாடகை | 22,31,760 | 32,55,000 | 29,58,171 | 31,06,000 |
| 06-130-40-01 | நிலவாடகை மற்றும் குத்தகை | 16,16,972 | 34,84,000 | 35,35,006 | 37,11,000 |
| 06-431-40-02 | நிலவாடகை மற்றும் குத்தகை – நிலுவை – வசூலிக்கத்தக்கது | 2,98,44,819 | 3,00,00,000 | 2,67,77,002 | 2,81,15,000 |
| 42-130-10-06 | பேருந்து நிலைய நுழைவு கட்டணம் | 18,06,640 | 30,00,000 | 38,19,751 | 40,10,000 |
| 42-130-80-05 | நவீன கட்டணக் கழிப்பிடம் | 55,68,985 | 78,00,000 | 70,52,638 | 74,05,000 |
| 55-130-10-02 | சமுதாயக்கூட வாடகை | 1,34,965 | 23,000 | 1,41,713 | 1,48,000 |
| 58-130-10-01 | வணிக வளாக வாடகை | 3,32,01,379 | 7,79,50,000 | 6,03,11,463 | 7,83,27,036 |
| 58-130-10-03 | தினசரி சந்தைக் கட்டணம் | | 2,51,00,000 | 1,33,75,266 | 2,91,55,129 |
| 58-130-10-04 | வாரச் சந்தைக் கட்டணம் | 1,74,73,513 | 1,46,70,700 | 4,59,56,341 | 4,82,54,000 |
| 58-431-40-06 | வணிக வளாக வாடகை – நிலுவை – வசூலிக்கத்தக்கது | 13,75,19,971 | 10,00,00,000 | 9,30,28,534 | 9,76,81,000 |

| கணக்கு எண் | கணக்குத் தலைப்பு | உள்ளபடி வரவு 2022-2023 | திட்ட மதிப்பீடு 2023-24 | திருத்திய மதிப்பீடு 2023-24 | திட்ட மதிப்பீடு 2024-25 |
|---|---|---|---|---|---|
| 61-130-10-08 | தோட்டம் / பூங்கா வரவுகள் | 64,46,700 | 67,69,000 | 76,17,525 | 1,14,34,500 |
| 83-130-80-03 | வாகன நிறுத்துமிட கட்டணம் | 30,00,400 | 31,50,000 | 1,33,88,990 | 1,40,58,000 |
| 83-431-40-14 | பேருந்துநிலையக் கட்டணம் – நிலுவை – வசூலிக்கத்தக்கது | 5,69,952 | 6,00,000 | 5,69,952 | 5,98,000 |
| 90-130-80-07 | தடவாடகை கட்டணம் | 74,780 | 20,000 | 78,510 | 1,00,000 |
| | **மொத்தம் (3)** | **23,94,90,836** | **27,58,21,700** | **27,86,10,862** | **32,61,02,665** |
| **சேவை கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள்** | | | | | |
| 02-140-10-01 | ஒப்பந்ததாரர் / கட்டிட வரைவாளர் / பொருள் விநியோகிப்போர் உரிமம் பதிவு கட்டணம் | 2,27,000 | 3,20,000 | 3,07,000 | 1,00,000 |
| 02-140-13-02 | பிறப்பு இறப்பு சான்றிதழ் கட்டணம் | 6,03,729 | 7,80,000 | 98,000 | 7,90,000 |
| 02-140-20-01 | காசாக்கப்படாத காசோலை தண்டனை வரவு | 46,472 | 50,000 | 38,090 | 50,000 |
| 02-140-14-02 | மனை வரன்முறை கட்டணம் | 15,67,05,600 | 20,00,00,000 | 12,02,62,750 | 20,00,00,000 |
| 02-140-14-03 | அபிவிருத்திக் கட்டணம் (கட்டிடம்) | 1,26,73,100 | 75,00,000 | 78,03,130 | 90,00,000 |
| 21-140-70-01 | வெட்டிய சாலை சீரமைப்பு கட்டணம் | 3,72,32,360 | 2,00,00,000 | 2,09,98,263 | 2,00,00,000 |
| 30-140-11-01 | தொழில் உரிமக் கட்டணம் | 1,34,30,511 | 1,35,00,000 | 1,41,02,036 | 2,00,00,000 |
| 45-140-11-04 | ஆடுவதைக் கட்டணம் | 34,00,000 | 35,70,000 | 35,77,900 | 1,57,00,000 |
| 02-140-20-04 | இதர தண்டனை கட்டணம் | 2,71,43,771 | 2,50,00,000 | 2,04,44,697 | 2,50,00,000 |
| 12-140-11-03 | கட்டிட உரிமக் கட்டணம் | 3,35,53,055 | 1,90,00,000 | 2,00,36,848 | 3,00,00,000 |
| 11-140-15-02 | கட்டிட இடிபாடு அகற்றும் கட்டணம் | 3,07,85,865 | 1,85,00,000 | 1,25,46,540 | 1,85,00,000 |
| 11-140-50-07 | மயான கட்டணம் | 5,73,750 | 5,00,000 | 5,40,000 | 6,00,000 |
| 11-140-50-10 | குப்பை அகற்றுதல் பயன்பாட்டு கட்டணம் | 19,68,18,989 | 11,50,00,000 | 11,48,50,619 | 12,65,00,000 |
| 11-431-30-08 | குப்பை அகற்றுதல் பயன்பாட்டு கட்டணம் நிலுவை | 16,89,81,348 | 12,00,00,000 | 12,77,12,926 | 13,00,00,000 |
| 11-140-50-08 | குப்பை/கழிவுகள் அகற்றும் கட்டணம் | 1,50,420 | 3,00,000 | 78,700 | 3,10,000 |
| 11-140-80-01 | நீதிமன்ற கட்டணம் திரும்பப் பெறுதல் | 5,00,000 | - | - | - |
| 03-140-80-03 | இதர பிடித்தங்கள் | 25,68,462 | 5,00,000 | 18,23,797 | 20,00,000 |
| 02-140-40-04 | ஒப்பந்ததாரர் / கட்டிட வரைவாளர் / பொருள் விநியோகிப்போர் உரிமம் புதுப்பித்தல் கட்டணம் | 34,395 | 60,000 | 52,00,000 | 60,00,000 |
| 11-140-40-02 | நில அளவைக் கட்டணம் | 1,69,000 | 2,20,000 | 98,000 | 1,50,000 |
| | **மொத்தம் (4)** | **68,55,97,827** | **54,48,00,000** | **47,05,19,296** | **60,47,00,000** |
| **விற்பனை மற்றும் வாடகை கட்டணம்** | | | | | |
| 02-150-12-01 | பழைய இரும்பு பொருட்கள் விற்பனை | | 4,00,000 | | |
| 02-150-12-02 | கழிவு பொருள் விற்பனை | 77,27,272 | 1,50,00,000 | 47,41,211 | 1,00,00,000 |

| கணக்கு எண் | கணக்குத் தலைப்பு | உள்ளபடி வரவு 2022-2023 | திட்ட மதிப்பீடு 2023-24 | திருத்திய மதிப்பீடு 2023-24 | திட்ட மதிப்பீடு 2024-25 |
|---|---|---|---|---|---|
| 02-150-40-01 | வாகனங்களுக்கான வாடகை கட்டணம் | | 2,00,00,000 | 28,00,000 | 3,00,00,000 |
| 42-150-10-03 | அம்மா உணவகம் | 56,36,645 | 58,00,000 | 52,41,991 | 53,00,000 |
| | **மொத்தம் (5)** | **1,33,63,917** | **4,12,00,000** | **1,27,83,202** | **4,53,00,000** |
| **வருவாய் மானியம் மற்றும் சகாயத் தொகை** | | | | | |
| 03-160-10-03 | அரசு மானியம் | 2,53,782 | 19,00,00,000 | 5,43,33,064 | 14,00,00,000 |
| 03-160-10-02 | இயற்கை சீற்றங்களுக்கான மான்யம் | | 25,00,000 | | |
| 03-160-10-04 | மாநில நிதிக்குழு மானியம் | 97,31,18,366 | 88,00,00,000 | 1,11,25,20,792 | 1,11,25,21,000 |
| | **மொத்தம் (6)** | **97,33,72,148** | **1,07,27,00,000** | **1,16,68,53,856** | **1,25,25,21,000** |
| **முதலீடுகள் மீதான வருவாய்** | | | | | |
| 03-170-10-01 | முதலீடுகள் மீதான வட்டி | 1,11,27,117 | 85,00,000 | 1,21,65,256 | 1,33,65,000 |
| 03-170-20-01 | பங்கு | 45,000 | 45,000 | 45,000 | 45,000 |
| | **மொத்தம் (7)** | **1,11,72,117** | **85,45,000** | **1,22,10,256** | **1,34,10,000** |
| **வட்டி மூலம் வருவாய்** | | | | | |
| 03-171-10-01 | சேமிப்பு கணக்கு மீதான வங்கி வட்டி | 6,71,18,946 | 85,00,000 | 1,71,18,946 | 1,50,00,000 |
| | **மொத்தம் (8)** | **6,71,18,946** | **85,00,000** | **1,71,18,946** | **1,50,00,000** |
| **இதர வருவாய்** | | | | | |
| 02-180-10-01 | வைப்புத்தொகை பறிமுதல் | 25,03,181 | | 11,36,000 | |
| 02-180-11-01 | வைப்புத்தொகை காலாவதி | 77,47,412 | | 1,02,15,150 | 1,20,00,000 |
| 03-180-80-01 | இதர வருவாய் | 2,18,70,616 | 2,10,00,000 | 1,01,67,788 | 1,00,00,000 |
| | **மொத்தம் (9)** | **2,18,70,616** | **2,10,00,000** | **1,01,67,788** | **1,00,00,000** |
| **முந்தைய ஆண்டு வரவினம்** | | | | | |
| 03-280-40-01 | முந்தைய ஆண்டு வரவினம் | 2,27,83,123 | 4,00,000 | 3,05,01,522 | 15,25,00,000 |
| | **மொத்தம் (10)** | **2,27,83,123** | **4,00,000** | **3,05,01,522** | **15,25,00,000** |
| **மொத்தம் கூடுதல் (1 முதல் 10 வரை)** | | **2,95,61,94,738** | **2,90,16,49,700** | **2,90,37,19,000** | **3,50,97,20,665** |

# பொது நிதி
## மூலதன வரவினம்

| கணக்கு எண் | கணக்குத் தலைப்பு | உள்ளபடி வரவு 2022-2023 | திட்ட மதிப்பீடு 2023-24 | திருத்திய மதிப்பீடு 2023-24 | திட்ட மதிப்பீடு 2024-25 |
|---|---|---|---|---|---|
| மானியம் மற்றும் குறிப்பிட்ட நோக்கங்களுக்கான பங்களிப்பு | | | | | |
| 03-320-60-02 | முன் இருப்பு – சீர்மிகு நகரம் திட்டம் | 11,00,00,000 | 78,50,00,000 | 32,97,07,003 | 75,00,00,000 |
| 03-320-60-02 | சீர்மிகு நகரம் திட்டம் | 1,80,92,39,871 | 50,50,00,000 | 52,76,20,093 | |
| 03-320-20-07 | நமக்கு நாமே திட்டம் | 15,77,96,329 | 70,00,00,000 | 5,15,77,000 | 30,00,00,000 |
| 03-320-10-01 | மத்திய நிதிக் குழு மான்யம் – 15 | 1,01,05,45,219 | 61,00,00,000 | 59,17,44,664 | 37,70,00,000 |
| 03-320-20-06 | தமிழ்நாடு நகர்ப்புர சாலை உள்கட்டமைப்பு நிதி (TURIF) | 40,26,85,000 | 1,00,00,00,000 | 34,94,64,000 | 89,92,00,000 |
| 03-320-30-02 | அரசு மான்யம் | 4,25,07,538 | 1,00,00,000 | 8,88,83,098 | 1,00,00,000 |
| 03-320-30-02 | Dormant நிதி | | | 27,04,50,000 | 27,04,50,000 |
| 03-320-30-02 | TNSUDP நிதி | 1,72,00,000 | | 35,32,000 | |
| 03-320-80-02 | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி | 25,57,094 | 2,00,00,000 | 1,00,00,000 | 2,57,30,000 |
| 03-320-10-04 | தூய்மை இந்தியா திட்டம் | 84,70,564 | 50,00,00,000 | 1,72,03,247 | 82,75,00,000 |
| 03-320-30-02 | மூலதன மானிய நிதி CGF | 3,95,16,000 | | 11,12,00,000 | 33,79,00,000 |
| 03-320-80-03 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி | 4,18,69,402 | 3,00,00,000 | 4,72,05,921 | 3,55,00,000 |
| 03-320-30-02 | உட்கட்டமைப்பு மற்றும் வசதிகள் நிதி (I&A) | | 80,00,00,000 | 7,21,00,000 | 1,16,65,00,000 |
| 03-320-30-02 | நகர்ப்புர சாலை மேம்பாட்டுத் திட்டம் NSMT | | 48,75,00,000 | 44,57,70,000 | 42,48,00,000 |
| 03-320-30-02 | மாநில நிதிக்குழு மான்யம் SFC fund | | 37,50,00,000 | 30,07,10,000 | 55,14,00,000 |
| 03-320-10-03 | அம்ருத் திட்டம் AMRUT 2.0 | | 1,00,00,000 | 80,64,000 | 1,00,00,000 |
| 03-320-10-01 | தேசிய நகர்ப்புர நல்வாழ்வுத் திட்டம் NUHM | 9,36,80,000 | 13,60,00,000 | 2,90,36,797 | 8,95,00,000 |
| 03-320-10-04 | தனிநபர் வீட்டு கழிப்பிடங்கள் IHHL & SBM 2.0 | | 35,00,000 | 3,64,000 | 25,00,000 |
| 03-320-30-02 | சிறப்பு மான்யம் SFC special Grant | | | 6,83,93,000 | 7,73,07,000 |
| 03-320-30-02 | மாவட்ட சிறப்பு நிதி– Fencing Fund | | | 25,00,000 | 30,00,000 |
| 03-320-30-02 | சூரிய மின் ஒளி திட்டம்Solar Project | | | | 30,15,00,000 |
| | **மொத்தம்** | **3,73,60,67,017** | **5,97,20,00,000** | **3,32,55,24,823** | **6,45,97,87,000** |

# பொது நிதி
## வருவாய் செலவினம்

| கணக்கு எண் | கணக்குத் தலைப்பு | உள்ளபடி வரவு 2022-2023 | திட்ட மதிப்பீடு 2023-24 | திருத்திய மதிப்பீடு 2023-24 | திட்ட மதிப்பீடு 2024-25 |
|---|---|---|---|---|---|
| **பணியமைப்புச் செலவுகள்** | | | | | |
| 51-210-10-01 | பணியாளர்கள் ஊதியம் | 34,53,71,825 | 45,00,00,000 | 37,15,45,572 | 53,00,00,000 |
| 51-210-10-04 | அகவிலைப்படி | 13,70,23,900 | 19,00,00,000 | 20,56,66,877 | 25,00,00,000 |
| 51-210-10-05 | வீட்டு வாடகைப்படி | 2,35,16,931 | 2,50,00,000 | 2,45,04,229 | 2,50,00,000 |
| 51-210-10-06 | நகர ஈட்டுப்படி | 38,32,607 | 45,00,000 | 40,42,144 | 45,00,000 |
| 51-210-10-07 | மருத்துவபடி | 37,51,573 | 40,00,000 | 39,30,995 | 40,00,000 |
| 51-210-10-08 | இதர படிகள் | 7,41,368 | 7,50,000 | 6,34,784 | 7,50,000 |
| 51-210-10-11 | போனஸ் | 26,84,000 | 28,00,000 | 26,45,500 | 30,00,000 |
| 51-210-20-06 | பயிற்சி செலவுகள் | 24,000 | 90,000 | 6,82,811 | 5,00,000 |
| 51-210-20-10 | பணியாளர் காப்பீட்டு திட்ட நிர்வாக பங்குத் தொகை | 66,400 | 19,00,000 | 18,72,518 | 30,00,000 |
| 51-210-20-14 | குழுக் காப்பீட்டுத் திட்ட நிர்வாக பங்குத் தொகை | 17,92,560 | 24,00,000 | 20,56,725 | 25,00,000 |
| 51-210-20-04 | சீருடை வழங்குதல் | 16,76,722 | 20,00,000 | 4,76,400 | 22,00,000 |
| 51-210-20-15 | பங்களிப்பு ஓய்வூதிய திட்ட பங்குத் தொகை | 1,79,35,270 | 2,00,00,000 | 89,83,576 | 3,00,00,000 |
| 51-210-20-19 | போக்குவரத்துபடி | 9,89,070 | 15,00,000 | 9,13,571 | 10,00,000 |
| 51-210-20-20 | சலவைப்படி | 17,22,771 | 22,00,000 | 17,82,579 | 20,00,000 |
| 51-210-10-10 | கூலி | 28,24,27,389 | 2,00,00,000 | 29,49,27,570 | 2,00,00,000 |
| 51-210-30-01 | ஓய்வூதியம் | 8,52,07,912 | 10,00,00,000 | 8,91,21,457 | 9,00,00,000 |
| 51-210-30-02 | குடும்ப ஓய்வூதியம் | 1,85,42,997 | 2,50,00,000 | 2,43,32,394 | 3,00,00,000 |
| 51-210-30-05 | ஓய்வூதிய பங்குத்தொகை | | 5,00,000 | | 5,00,000 |
| 51-210-30-06 | அயற்பணி ஓய்வூதிய பங்குத் தொகை | 2,03,687 | 5,00,000 | | 5,00,000 |
| 51-210-30-04 | தொகுப்பு ஓய்வூதியம் | 1,65,46,809 | 3,00,00,000 | 2,09,13,132 | 3,00,00,000 |
| 51-210-40-04 | ஓய்வூதியர் மருத்துவ நல நிதி | | 50,000 | | 50,000 |
| 51-210-40-02 | இறப்பு மற்றும் பணிக்கொடை | 3,41,52,154 | 4,00,00,000 | 3,57,21,823 | 4,00,00,000 |
| 51-210-20-01 | மருத்துவ செலவு ஈடுசெய்தல் | 1,24,633 | | | 2,00,000 |
| 51-210-20-02 | விடுமுறை போக்குவரத்து சலுகை | 1,23,492 | | | 2,00,000 |
| 51-210-40-03 | விடுமுறை ஊதியம் பங்களிப்பு | 1,49,291 | | | 2,00,000 |
| | **மொத்தம் (1)** | **97,86,07,361** | **92,31,90,000** | **1,09,47,54,657** | **1,07,01,00,000** |
| **நிர்வாகச் செலவுகள்** | | | | | |
| 02-220-10-04 | வாகன வரிகள் | 9,10,873 | 10,00,000 | 30,86,677 | 8,00,000 |
